விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 23 வள்ளுவர் ஆண்டு 2051 தை 20 திங்கட்கிழமை (03.02.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 46

# காணாமல் போனோருக்கு என்ன நடந்தது

# அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும்



## ஐ.நா.வதிவிடப்பிரதிநிதி ஹனாசிங்கர் கோரிக்கை

(கொழும்பு)

காணாமல் போனோருக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்தல், அதுகுறித்த விசாரணைகளை தொடர்ந்து முன்னெடுத்தல் மற்றும் இழப்பீடுகளை வழங்குதல் ஆகியவை இடம்பெற வேண்டும் என்றே ஐக்கிய நாடுகள் சபையும் உலக நாடுகளும் இலங்கையிடம் வலியுறுத்தி வருகின்றன என்று ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் தெரிவித்துள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களின் கடந்த காலத்தை புதிய அரசு நினைவுபடுத்துகிறது

### சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைப்பதை ராஜபக்ஷ அரசாங்கம் தடுப்பது தமிழ் மக்களின் கடந்த கால சூழலை மீண்டும் நினைவுபடுத்தவா என பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க கேள்வி யெழுப்பியுள்ளார்.

அத்துடன், சிங்கள, தமிழ் மக்களை நெருக்கமாக்கும் நடவடிக்கைகளை கடந்த அரசாங்கம் முன்னெடுத்தாகவும் தற்போதைய ▶23

## தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடுவது தொடர்பில் கடைசி தருணத்திலாவது நல்ல முடிவை எடுங்கள்


### ஜனாதிபதியிடம் மனோ பகிரங்க கோரிக்கை



(கொழும்பு)

முன்னாள் தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள் அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம், இந்த கடைசி தருணத்திலாவது நல்ல முடிவை நீங்கள் எடுக்க வேண்டும் என கோர விரும்புகிறேன். சுதந்திரதின வைபவத்தில் தமிழ் மொழியில் இலங்கை தேசிய கீதம் பாடப்படும்கடந்த நான்கு வருட நடைமுறையை உங்கள் நிர்வாகம், மாற்றி விடக்கூடாது என நான் விரும்புகிறேன். ▶23

## வவுனியாவில் கைக்குண்டு மீட்பு



▶23

## நான்கு பிள்ளைகளின் தாய் மயங்கி விழுந்து மரணம்

### அல்வாய் பகுதியில் துயரம்

(கரணவாய்)

வைத்தியசாலையில் சிகிச்சை பெற சென்ற குடும்ப பெண் ஒருவர் மயங்கி விழுந்து மரணம் அடைந்துள்ளார்.

வல்வெட்டித்துறை ஊறணி வைத்தியசாலையில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அல்வாய் வடக்கைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தாயாரான ▶23

### மீள்குடியமர மக்கள் ஆர்வமில்லை

## புதிதாக காணி விடுவிக்க கோருவது என்ன நியாயம்

### யாழ்.இராணுவத் தளபதி கேள்வி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட காணிகளில் மக்கள் குடியேறுவதற்கு ஆர்வம் காட்டவில்லை. எனினும் மேலதிக காணிகளை ▶23

### சுதந்திரதினம் தமிழர்களின் கரிநாள்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் வடக்கு கிழக்கில் நாளை கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

சுதந்திர தினம் தமிழர்களின் கரிநாள் என தெரிவித்து மாபெரும் கவனயீர்ப்பு போராட்டங்கள் நாளை வடக்கு கிழக்கில் முன்னெடுக்கப்படவுள்ளது.

வடக்கில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கந்தசுவாமி ▶23

## மாணவன் சடலமாக மீட்பு

### கோப்பாயில் சம்பவம்

▶23

## புலிகளின் ஆவணங்களுடன் கிளிநொச்சியில் ஒருவர் கைது

(பரந்தன்)

விடுதலைப்புலிகளின் இருபத்தொன்பது ஆவணங்கள் மற்றும் சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்ட ஐந்து ரப்பர் முத்திரைகள், ஒரு மெமரிக் காட், ஒரு பென் ரைவ் ஆகியவற்றுடன் சந்தேக நபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்

கிளிநொச்சி இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கிளிநொச்சி விசேட அதிரடிப்படையினர் ஆகியோர் இணைந்து நடத் ▶23

## யாழில் கொரோனா வைரஸ் என பீதியைக் கிளப்ப வேண்டாம்

### மருத்துவர் யமுனானந்தா கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோயாளி இதுவரை காணப்படாத நிலையில் தேவையற்ற பீதியை மக்கள் மத்தியில் பரப்புவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப் ▶23

### வவுனியாவில் நான்கு இடங்களில்

# 60 கிலோக்கிராம் கஞ்சாவுடன் 29 பேர் பொலிஸாரால் கைது

(வவுனியா)

யாழில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற வாகனங்களை வவுனியாவின் நான்கு இடங்களில் மறித்து மேற்கொள்ளப் பட்ட விசேட சோதனை நடவடிக்கை யின் போது 60 கிலோ கேரள கஞ்சாவும் 600 மில்லிக்கிராம் ஹெரோயினும் கைப்பற் றப்பட்டுள் ளதாகவும், இவற்றை உடைமை யில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 29 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் வவுனியா பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 25 ஆம் திகதி தொடக்கம் நேற்று வரையிலான 09 நாட்கள் மேற் கொள்ளப் பட்ட விசேட சோதனை நடவடிக்கை யின் போதே இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

வவுனியா பிரதி பொலிஸ் மா அதிபர் தம்மிக்க பிரியந்த அவர் களின் வழிகாட் டலில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திஸல் லால்டி சில்வா மற் றும் உதவி பொலிஸ் அத் தியட்சகர் மல்வலகே ஆகியோரின் நேரடி கண்காணிப்பில் விசேட கடமையில் ஈடு பட்டிருந்த பொலிஸார் வவுனியா மாவட்டத் தின் புளியங்குளம், கனகராயன்குளம், ஓமந்தை, ஈரப்பெரியகுளம் ஆகிய பகுதி களில் ஏ9 வீதியில் பயணித்த வாகனங் களை வழிமறித்து சோதனையிட்டபோதே, பயண பைக ளில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் இருந்த 60 கிலோ கேரள கஞ்சா மற்றும் 600 மில்லிக்கிரேம் ஹெரோயின் போதை பொருள் கண்டுபிடிக்கப்பட்டு பொலி ஸாரால் கைப்பற் றப்பட்டன.

இவற்றின் பெறுமதி சுமார் எண் பது இலட்சம் ரூபாய் எனவும் மதி ப்பிடப்பட்டுள் ளது.

அத்துடன் இவற்றை உடமையில் வைத் திருந்தமை மற்றும் கொண்டு சென்றமை தொடர்பில் 29 பேர் கைது செய்யப்பட்டுள்ள னர்.

கைது செய்யப்பட்டவர்களை மேலதிக விசாரணைகளின் பின் வவுனியா நீதிமன் றில் முற்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஞா-250)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603**
**021 567 1532**

# ஐ.தே.க முன்னணியின் தலைவரானார் சஜித்

நேற்று நண்பகல் நடைபெற்ற ஐக்கிய தேசிய கூட்டணி கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் கூட்டணி தொடர்பான பல்வேறு முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

புதிய கூட்டணியின் செயலாளராக ரஞ் சித மத்துவ பண்டாரவே நியமிக்கப்படவுள் ளார்.

நேற்றைய சந்திப்பு தொடர்பாக, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தனது பேஸ்புக் பக்கத்தில்,

ஐக்கிய தேசிய முன்னணி என்ற கூட் டணியின் தலைவராக சஜித் பிரேமதாஸ நியமிக்கப்பட வேண்டும் என்ற கூட்டணி கட்சிகளின் முடிவை ஐக்கிய தேசிய கட்சி யின் செயற்குழு ஏற்றுக்கொண்டதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம் எனக் குறிப்பிட்டுள் ளார். (ஞா)

# மரண அறிவித்தல்



தோற்றம் 10 ❁ 11 ❁ 1959

மறைவு 31 ❁ 01 ❁ 2020

## இரத்தினகோபால் அருந்தவமலர்

வல்வெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினகோபால் அருந்தவமலர் 31.01.2020 வெள்ளிக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரம் - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வல்லிபுரம் - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், இரத்தினகோபாலின் அன்பு மனைவியும், பிரதீபன் (பாடசாலை அலுவலகப்பணியாளர் யா/அம்பன் அ.மி.த.க.பாடசாலை), கமலதீபன் (சுவிஸ்), பிரதீபா ஆகியோரின் அன்புத் தாயாரும் யோகர்தி, நளாயினி (சுவிஸ்), பிரபாகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் தனுசிகன், பிரவிந்தன், துவாரகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற பசுபதி மற்றும் அருணகிரிராசா காலஞ்சென்ற சச்சிதானந்தம் மற்றும் சுந்தரலிங்கம், சின்னராசா, பொன்னம்பலம், உலகநாதன், குமரகுரு ஆகி யோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.02.2020) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று காலை 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊறணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:-குடும்பத்தினர்
மகன் பிரதீபன் - 0773107752,
மகள் பிரதீபா - 0763616810,
மகன் கமலதீபன் - 0776736234

வல்வெட்டித்துறை. (C-9136)

# மரண அறிவித்தல்கள்

## குமாரவரோதயர் சிவகடாட்சம்பிள்ளை

(ஓய்வு நிலை மின் அத்தியட்சகர்)



மாவிட்டபுரம்பளை வீமன்காமத்தை பிறப்பிடமாகவும் இந்துக் கல்லூரி வீதி உரும்பிராய் வடக்கு உரும்பிராயை வசிப் பிடமாகவும் கொண்ட குமாரவரோதயர் சிவகடாட்சம்பிள்ளை (ஓய்வுநிலை) மின் அத்தியட்சகர் நேற்று (02.02.2020) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கமலாதேவியின் துணைவரும் (கணவரும்) காலஞ்சென்ற சிவகுமாரன் (மாகாண சபை உத்தியோகத்தர்), காலஞ் சென்ற சத்தியகுமாரன் மாவைவரோதயன் (சுகாதாரப் பரிசோதகர்) மற்றும் சிவாணி, சியாமினி ஆகியோரின் தந்தையும் மலர்விழி, ஜெயகௌரி, ஸ்ரீமுருகையா ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற சிவதாசபிள்ளை, சிவசோதிப்பிள்ளை, பாலசுந்தரம்பிள்ளை, சிவ சிங்காரியபிள்ளை மற்றும் சிவபூரணம்பிள்ளையின் சகோதரரும் அக்சனா, ஆர்த்தனா, அருணன், சுகாபரன், கோபி, மகிஷா, அனுசா, அக்சயா, அஸ்வனா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.02.2020) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வடக்கு இருளன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இந்துக் கல்லூரி வீதி,
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். (2011)

தகவல்:- பா.இரமணாகரன்
ஆசிரியர் (மருமகன்)

## திருமதி பரிமளம் குலசேகரம்பிள்ளை



பிறப்பு 1941.11.10 இறப்பு 2020.02.01

உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் உடை யார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரிமளம் குலசேகரம்பிள்ளை அவர்கள் 01.02.2020 சனிக்கிழமை அன்று காலமானார்

அன்னார் காலஞ்சென்ற குலசேகரம் பிள்ளையின் அன்பு மனைவியும் சிவனேஸ்வரி, ஜெகதீஸ்வரி, சிவனேஸ் வரன், ஜெகதீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயும் விக்னேஸ்வரமூர்த்தி, அன்ரன் ஆனந்தகுமார், சாந்தினி ஆகி யோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (03.02.2020) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுதந்திரபுரம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உடையார்கட்டு,
முல்லைத்தீவு. (C-9142)

தகவல்:-
சிவனேஸ்வரன்

# இதய அஞ்சலி



## அமரர் கனகசபை சந்திரமௌலீசன்

கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும் ஓய்வுநிலை ஆசிரியரும் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவனும் எமது கல்லூரியின் முன்னாள் சிறந்த இரசாயனவியல், கணித பாட ஆசானுமாகிய **கனகசபை சந்திரமௌலீசன்** அவர்கள் பிரித்தானியாவில் இறை பதம் எய்திய செய்தி எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. அன்னார் எமது கல்லூரி மாணவர்களின் நலன்கருதி கல்லூரி பரிசுத்தின நிகழ்வின்போது இரசாயனவியல், கணித பாடத்தில் திறமைச் சித்தி எய்தியவர்களை கௌரவிக்கும் முகமாக அன்னாரின் பெற்றோர்களின் ஞாபகார்த்தமாக பரிசில்களை வழங்குவதற்கு கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியமூடாக நிதி வழங்கியுள்ளமை பாராட்டுக் குரியவை. எனவே அன்னாரை பிரிந்து வாழும் மனைவி, பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் எல்லோருக்கும் நிதியத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி

(2007)


# புங்குடுதீவில் படகில் மறைத்து வைக்கப்பட்டிருந்த
# 300 கிலோ கேரளக் கஞ்சா மீட்பு!

## கடற்படையினரால் நால்வர் கைது

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம், புங்குடுதீவு கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட ரோந்துப் பணியின் போது சுமார் 300 கிலோ கிராம் கேரளக் கஞ்சாவை கடற்படையினர் மீட்டனர்.**

**நேற்றுக் காலை குறித்த பிரதேசத்தில் தரித்து நின்ற சந்தேகத்திற்கிடமான டிங்கிப் படகொன்றை சோதனையிட்டபோது அதில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 300 கிலோ கேரளக் கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டதாக, கடற்படையின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.**





இதேவேளை குறித்த படகில் இருந்த இரண்டு சந்தேக நபர்களை கடற்படையினர் கைது செய்தனர்.

சந்தேக நபர்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில், யாழ்ப்பாணம், சங்குப்பிட்டி பகுதியில் மேலும் இரு போதைப் பொருள் கடத்தல்காரர்களை கடற்படையினர் கைது செய்தனர்.

கைப்பற்றப்பட்ட கேரளக் கஞ்சாவை, மேலதிக விசாரணைகளுக்காக யாழ்ப்பாணம் போதைப் பொருள் தடுப்புப் பிரிவிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்றுமுன்தினம் காங்கேசன்துறை, மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்திற்கு முன்பாகவுள்ள கடற்பகுதியில் கடற்படையினர் மேற்கொண்ட கண்காணிப்பு நடவடிக்கையின் போது, நீரில் மிதந்தவாறு காணப்பட்ட 95.4 கிலோ கிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

20 பொதிகளில் இரு உரப் பைகளில் வைக்கப்பட்ட நிலையில் கஞ்சா மீட்கப்பட்டது.

இது தொடர்பில் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. குறித்த கேரளக் கஞ்சா யாழ். விசேட அதிரடிப் படை முகாமில் ஒப்படைக்கப்பட்டது. (இ-7)

# நாடாளுமன்றில் நால்வர் மௌனம்
# ஒன்பது பேர் ஒருமுறை மட்டும் உரை

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வர் கடந்த ஓராண்டு முழுவதும் நாடாளுமன்றில் உரையாற்றாமை ஒரு ஆய்வின் மூலம் தெரியவந்தது.

Manthri.lk இனால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி, 2019 ஆம் ஆண்டில் நாடாளுமன்ற அமர்வுகளின் போது, இந்திக்க பண்டாரநாயக்க, ஜனக பண்டார தென்னகோன், சிரிபால கம்லாத் மற்றும் துலிப் விஜேசேகர ஆகிய நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உரையாற்றவில்லை என உறுதிப்படுத்தப்பட்டது.

இதேவேளை நாடாளுமன்றில் ஒரு சந்தர்ப்பத்தில் மட்டுமே பேசிய ஒன்பது நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருப்பதாவும் கண்டறியப்பட்டது.



அதில் இரண்டு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதாவது, முன்னாள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் மற்றும் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் எனத் தெரியவந்தது.

இதேவேளை துனேஷ் கங்கந்த, எஸ்.பி.நாவின்ன, லக்ஷ்மன் வசந்த பெரேரா, சதுர சேனாரத்ன, மொஹான் லால் கிரே, லொஹான் ரத்வத்தே மற்றும் பிரேமலால் ஜயசேகர ஆகியோரே ஒரு தடவை மாத்திரம் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் என அந்த ஆய்வில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## பிரித்தானியாவில் கொரோனா தொற்று; யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் உயிரிழப்பு

(லண்டன்)

பிரித்தானியாவில் கொரோனா வைரஸ் தாக்கிய முதல் நபர் உயிரிழந்தார். **Mitcham steatham** பகுதியில் வியாபார நிலையம் வைத்திருக்கும் யாழ். பருத்தித்துறை ஓடக்கரைப் பகுதியைச் சேர்ந்த தங்கவேலாயுதம் கணேசரத்தினம் (வயது-48) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார். கடந்த 28 ஆம் திகதி தனது கடைக்கு தேவையான பொருட்களை சீன மொத்த விற்பனை நிறுவனம் ஒன்றில் கொள்முதல் செய்துவிட்டு அந்த நிறுவனத்தில் அமைந்துள்ள உணவு விடுதியில் உணவருந்தி உள்ளார். இதையடுத்தே இவர் கொரோனா வைரஸ் தாக்கத்துக்கு ஆளானார். நேற்றுக் காலை எட்டு மணியளவில் அவர் உயிரிழந்ததை வைத்தியர்கள் உறுதிப்படுத்தினர். (இ-7)

# இலங்கையில் ஒருவார காலத்திற்கு வீடுகள் வர்த்தக நிலையங்களில் தேசியக் கொடி ஏற்றுமாறு அறிவிப்பு

(கொழும்பு)

பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கம் ஒருவார காலத்திற்கு அதாவது எதிர்வரும் 7 ஆம் திகதி வரை அனைத்து வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களில் தேசியக் கொடியை ஏற்றுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டது.

இலங்கையின் 72 ஆவது சுதந்திர தின வைபவம் நாளை நான்காம் திகதி சுதந்திர சதுக்கத்தில் சிறப்பாக கொண்டாடப்படும்.

இது தொடர்பான ஏற்பாடுகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந் நிலையில் குறித்த அறிவித்தலை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு விடுத்தது.

இதேவேளை இன்று மூன்றாம் மற்றும் நாளை நான்காம் திகதிகளில் மின் ஒளி அலங்காரம் அரச நிறுவனங்களில் இடம் பெறவுள்ளன.


மேலும் வீட்டு வளவுகளில் மரக்கன்றுகளை நடுமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 500 அடி நீளமும் 30 அடி அகலமும் கொண்ட தேசியக் கொடி இலங்கையில் உருவாக்கம்

(கொழும்பு)

72ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு 500 அடி நீளமும் 30 அடி அகலமும் கொண்ட தேசிய கொடியொன்று உருவாக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது. சீதாவகபுரவிலுள்ள விகாரை ஒன்றில் இந்த தேசியக் கொடி உருவாக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# காணாமல்போனவர்கள் பற்றிய சட்டத்தில் தன்னிச்சையான திருத்தங்களை அரசாங்கம் மேற்கொள்ள முடியாது



## ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

காணாமல்போனவர்கள் பற்றிய சட்டத்தில் புதிய அரசாங்கம் ஏதேனும் மாற்றங்களை ஏற்படுத்துவதாக இருப்பின், அது காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களுடனும், அந்தக் குடும்பங்கள் மற்றும் எமது அலுவலகத்துடன் ஒன்றிணைந்து பணியாற்றும் நிறுவனங்களினதும் பரந்த ஆலோசனைகளுக்கு அமைவாக அந்தச் சட்டத்திருத்தங்கள் அமைய வேண்டும் என்று காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தவிசாளர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்தார்.

அண்மையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கருடனான சந்திப்பின் போது "காணாமல் போனோர் அனைவரும் உயிரிழந்து விட்டார்கள்.

அவர்களில் பெரும்பாலானோர் விடுதலைப் புலிகளால் அழைத்துச் செல்லப்பட்டவர்கள் அல்லது வற்புறுத்தலின்பேரில் அதில் இணைத்துக்கொள்ளப்பட்டவர்களாவர்.

காணாமல்போனோர் விவகாரம் தொடர்பில் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அவர்களுக்கு இறப்புச்சான்றிதழ்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அத்தோடு அவர்களின் குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான உதவிகளும் செய்துகொடுக்கப்படும் என்று தெரிவித்ததாக ஜனாதிபதி அலுவலகத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து காணாமல் போனோரின் உறவினர்களால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதுடன், மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களும் தமது கண்டனங்களை வெளியிட்டிருந்தன.

இந்நிலையில் இதுகுறித்து காணாமல்போனோர் அலுவலகத்தின் நிலைப்பாட்டை வினவிய போதே அதன் தவிசாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)


# நியூசிலாந்தை வெள்ளையடிப்புச் செய்து சாதனை படைத்தது கோலியின் இந்தியா

இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்தாவதும் இறுதியுமான ரி-20 போட்டியிலும் இந்திய அணி வெற்றி பெற்றுள்ளது. இதன் மூலம் 5-0 என்ற கணக்கில் நியூசிலாந்தை இந்திய அணி 'வயிற் வோஷ்' செய்து சாதனை படைத்துள்ளது.

இந்தியா-நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 5ஆவதும் இறுதியுமான ரி-20 போட்டி மவுண்ட் மவுங்கானுயில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்றது. இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது.

அதன்படி களமிறங்கிய அவ்வணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 3 விக்கெட் இழப்பிற்கு 163 ஓட்டங்களை எடுத்தது. இந்திய அணி சார்பில் துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக ரோஹித் சர்மா 60 ஓட்டங்களையும், கே.எல்.ராகுல் 45 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். நியூசிலாந்து அணியின் பந்துவீச்சில் குகலிஜின் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பின்னர் 164 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய நியூசிலாந்து அணியின் தொடக்க வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.





நடுவரிசையில் களமிறங்கிய ரோஸ் டெய்லர் அரைச்சதம் குவிக்க நியூசிலாந்து அணியால் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகள் இழப்பிற்கு 156 ஓட்டங்களை மாத்திரமே பெற முடிந்தது. இதனால் இந்தியா 7 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகளிலும் வெற்றி பெற்று நியூசிலாந்தை வயிட் வோஷ் செய்து சாதனைப் படைத்தது இந்தியா. 3 விக்கெட்டுகளை வீழ்த்திய பும்ரா ஆட்ட நாயகன் விருதை வென்றார். லோகேஷ் ராகுல் தொடரின் நாயகன் விருதை வென்றார்.

## 8 வது அவுஸ்திரேலிய ஓபன் பட்டத்தை வென்று சம்பியனானார் ஜோகோவிச்



மெல்பேர்னில் நடைபெற்று வரும் அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்றைய தினம் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் டென்னிஸ் தரவரிசையில் 5 ஆவது இடத்திலுள்ள 26 வயதுடைய ஆஸ்திரியாவின் டொமினிக் தீமும், 32 வயதான செர்பியாவின் நோவக் ஜோகோவிச்சும் ஒருவரை ஒருவர் எதிர்த்தாடினர்.

சுமார் நான்கு மணித்தியாலங்கள் இடம்பெற்ற இந்த விறுவிறுப்பான ஆட்டத்தின் இறுதியில் ஜோகோவிச் 6-4, 4-6, 2-6, 6-3, 6-4 என்ற செட் கணக்கில் டொமினிக் தீமை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை தனதாக்கினார்.

அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரில் ஜோகோவிச் பட்டம் வெல்வது இது எட்டாவது முறையாகும்.

இந்த வெற்றியின் மூலம் ஜோகோவிச் டென்னிஸ் தரவரிசை பட்டியலில் மீண்டும் முதலிடத்துக்கு வந்தார்.

## 2020 டோக்கியோ ஒலிம்பிக்

### உத்தியோகபூர்வ ஒலிம்பிக் சுடர் வெளியீடு


2020 ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் போட்டிகள் எதிர்வரும் ஜூலை 24 ஆம் திகதி முதல் ஆகஸ்ட் மாதம் 09 ஆம் திகதி வரை டோக்கியோவில் நடைபெறவுள்ளது.

இந் நிலையில் இந்த ஒலிம்பிக் போட்டிக்கான உத்தியோகபூர்வ ஒலிம்பிக் சுடரை ஜப்பானிய நிறுவனம் ஒன்று வெளியிட்டுள்ளது.

இந்த சுடரானது 2011 இல் புகுஷிமா பேரழிவிற்குப் பின்னர் மக்களுக்காக வீடு கட்டப்பட்ட தற்காலிக வீடுகளில் இருந்து எடுக்கப்பட்ட 30 சதவீத மறுசுழற்சி அலுமினியத்தின் உதவியுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இது ஜப்பானின் புகழ்பெற்ற சின்னங்களின் ஒன்றான செர்ரி மலரை ஒத்ததாகவும், மழை மற்றும் 38 மைல் வேகத்தில் காற்று வீசினால் சுடரின் ஜோதியை அணையாமல் உள்ளபடியும் வடிவமைக்கப்பட்டுள்ளது.





## ஒரே ஓவரில் 34 ஓட்டங்கள்

### மோசமான சாதனையை பதிவு செய்த டுபே

ரி20 கிரிக்கெட்டில் ஒரே ஓவரில் அதிக ரன்கள் விட்டுக்கொடுத்த 2-வது வீரர் என்ற மோசமான சாதனையை பதிவு செய்துள்ளார் ஷிவம் டுபே.

நியூசிலாந்து - இந்தியா இடையிலான 5-வது மற்றும் கடைசி டி20 போட்டி நேற்று மவுண்ட் மவுங்கானுயில் நடைபெற்றது. முதலில் பேட்டிங் செய்த இந்தியா 163 ரன்கள் அடித்தது. பின்னர் 164 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் நியூசிலாந்து களம் இறங்கியது. அந்த அணி 9 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 64 ரன்கள் எடுத்திருந்தது.

நியூசிலாந்து வெற்றிக்கு 11 ஓவரில் 100 ரன்கள் தேவைப்பட்டது. 10-வது ஓவரை ஷிவம் டுபே வீசினார். இந்த ஓவரின் முதல் பந்தை செய்பெர்ட் சிக்சருக்கு தூக்கினார். 2-வது பந்தையும் சிக்சருக்கு தூக்கினார். 3-வது பந்தை பவுண்டரிக்கு துரத்தினார். 4-வது பந்தில் ஒரு ரன் விட்டுக்கொடுத்தார். முதல் நான்கு பந்தில் 17 ரன்கள் விட்டுக்கொடுத்தார். 5-வது பந்தை ராஸ் டெய்லர் பவுண்டரிக்கு துரத்தினார். அந்த பந்து நோ-பால் ஆக வீசினார் டுபே. இதனால் ஐந்து ரன்களுடன் ஒரு பந்தும் வீச வேண்டியிருந்தது. அந்த பந்தை டெய்லர் சிக்சருக்கு தூக்கினார். அதற்கு அடுத்த பந்தையும் சிக்சருக்கு தூக்கினார்.

ஆக மொத்தம் 6, 6, 4, 1, 4,1, 6, 6 என 34 ரன்கள் விட்டுக்கொடுத்தார். இதன்மூலம் டி20 கிரிக்கெட்டில் ஒரே ஓவரில் அதிக ரன்கள் விட்டுக்கொடுத்த பந்து வீச்சாளர் என்ற மோசமான சாதனையை படைத்துள்ளார்.

இதற்கு முன் ஸ்டூவர்ட் பிராட் இந்தியாவுக்கு எதிராக ஆறு பந்திலும் ஆறு சிக்சர்கள் விட்டுக்கொடுத்து முதல் இடத்தில் உள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிராக பர்னெல் 2012-ம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக 32 ரன்கள் விட்டுக்கொடுத்து 3-வது இடத்தில் உள்ளார்.



குருநகர் புதுமை மாதா ஆலய நற்கருணை பெருவிழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. (படங்கள்:- குருநகர் செய்தியாளர்)

# உலக வங்கியின் நிதியுதவியின் கீழ் தெரிவு செய்யப்பட்ட

# யாழ்.பழைய கச்சேரியின் அபிவிருத்தி கைவிட்டுப் போகும் நிலை

## பிரதமருடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுப்பேன் என்கிறார் அங்கஜன்

(யாழ்ப்பாணம்)

சுமார் 55 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் யாழ். தந்திரோபாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட யாழ். பழைய க்ச்சேரியின் அபிவிருத்திப் பணிகள் அடுத்த வருடம் 2021 உடன் கைவிட்டுப் போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்திற்கு உலகவங்கியால் நான்கு மாவட்டங்களின் அபிவிருத்திகளை முன்னெடுப்பதற்காக வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் யாழ்.மாவட்டத்திற்காக சுமார் 55 மில்லியன் அமெரிக்க டொலர் வழங்கப்பட்டது.

இந் நிதியில் யாழ்.மாவட்டத்தின் இரு வீதிகள் மட்டும் செப்பனிடப்பட்டன.

எஞ்சிய நிதியில் யாழ்.பழைய கச்சேரி மற்றும் பழைய பூங்காவை இணைத்துப் பொழுது போக்கு அம்சம் கொண்ட பிரதேசமாக மாற்றும் செயற்பாடு பரிந்துரைக்கப்பட்டது.

இந்நிலையில் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் தொல்பொருள் திணைக்களத்துக்குப் பொறுப்பான அமைச்சராக சஜித் பிரேமதாஸவும் பெருநகர அபிவிருத்தி அமைச்சராக பாட்டலி சம்பிக்க ரணவக்கவும் செயற்பட்டனர்.

குறித்த பழைய கச்சேரி தொல்பொருள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் இருந்ததால் புனரமைப்பதற்கான துரித நடவடிக்கைகள் எதுவும் செய்யப்படவில்லை. இவ் விடயம் தொடர்பில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரைத் தொடர்பு கொண்டபோது குறித்த திட்டங் கள் கடந்த ஆட்சியில் உலக வங்கியால் வழங்கப்பட்ட திட்டங்களாகும்.

எனவே தற்போதைய அரசாங்கத்தில் தொல்பொருள் திணைக்களம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் கீழ் வருவதால் அவருடன் இது தொடர்பில் கலந்துரையாடி நடவடிக்கை எடுப்பேன் என அவர் உறுதிபடத் தெரிவித்தார். (ஜ-10)



## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் 5 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கல்லூரி மைதானத்தில் அதிபர் சி.திரிகரன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் ந.சித்தார்த்தன், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சிவநேசன், வலி.கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் இ.செல்வராஜா ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

## இரத்ததானம்

(குப்பிழான்)

உடுவில் றோட்டறக் கழகத்தின் ஏற்பாட்டில் உடுவில் டச்சு வீதியில் அமைந்துள்ள வசி சமூக நல முன்பள்ளியில் நாளை செவ்வாய்க்கிழமை இரத்ததான முகாம் நாளை காலை 8.30 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை நடைபெறும்.(இ-18)


## நாக சொரூபத்தை வழிபட்ட நாகம்

(கரணவாய்)

நாக சொரூபத்தை நாகமொன்று வழிபட்ட அபூர்வ சம்பவம் நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலயத்தில் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை ஆலயத்தின் நாக புற்று அமைந்துள்ள பகுதியில் வைக்கப்பட்டுள்ள நாகர்கோவில் சொரூபத்தை நாகம் ஒன்று வழிபட்டது.

கடந்த வாரம் ஆலய மண்டபத்தில் நாகபாம்பு ஒன்று படமெடுத்து ஆடிய வண்ணம் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-60)



## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 01.08.1970

உதிர்வு 07.02.2014

அமரர் கந்தையா ரகுநாதன் (மகிந்தன்)

திதி: தைமாத பூர்வபட்ச நவமி

புன்னகை தவழும் உன்முகமும்
இராகம் இசைக்கும் உன்பேச்சும்
மண்ணுக்கு நோகா மென்நடையும்
மனதுக்குள் வந்து
கண்களால் சொரியுதுவே

இல.23,பண்றோட்,
திருநகர் வடக்கு, கிளிநொச்சி

## பதினொராம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 16.03.1998

உதிர்வு 25.01.2009

அமரர் மாலதி (மதுஷா) மனோகரராசா

மாணவி – தரம் 06– 2009
கிளிநொச்சி மகா வித்தியாலயம்


பிறந்த நாளுக்கு
ஆடம்பரம் வேண்டாம்
பாடசாலை நூலகத்திற்கு
புத்தகம் வாங்கிக் கொடுப்போம்
என்ற உன் உயரிய சிந்தனை
கனவாய் போனதுவே...

குடும்பத்தினர்.

(சி-9137)

யா/கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை

## கண்ணீர் அஞ்சலி



அமரர்.
பாஸ்கரநாயகர்
குணபாலன்

எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி சற்குணதேவி இராசலிங்கம்**
அவர்களின் தந்தையார்
**பா.குணபாலன்** அவர்கள்
01-02-2020 அன்று காலமானார்.
அவரின் இழப்பால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
இரங்கல்களைத் தெரிவிப்பதோடு அவரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

(2003)

அதிபர்,ஆசிரியர்கள்,கல்விசாரா ஊழியர்கள்,
யா/கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை

# நலம் தரும் ஜோதிட குறியீடுகள்

## செல்வ வளம் தரும் குறியீடு


ஜோதிடத்தில் தனஸ்தானம் எனக் குறிப்பிடுவது இரண்டாம் பாவமாகும். காலப்புருஷ லக்னமான மேடத்திற்கு இரண்டாம் பாவம் ரிஷபமாகும். ரிஷப ராசியின் குறியீடு காளை மாடாகும். பொதுவாக பொன், பொருள், பணம் முதலியவை தனம் எனப்படும். தனம் என்றால் எருது, பசு எனவும் பொருள் கூறப்படுகிறது. பண்டைய காலத்தில் ஒரு மனிதனுடைய தனநிலை, அவனிடம் இருந்த மாடுகளின் எண்ணிக்கையை வைத்துத் தான் நிர்ணயிக்கப்பட்டது. எனவே காளை மாட்டின் உருவம் ஒரு செல்வக் குறியீடாகும்.

பெரிய அளவில் பணப்பரிமாற்றம் நிகழும் பங்குச்சந்தையில் பங்குகளின் ஏறுமுகப் போக்கை குறிப்பிட காளைமாட்டின் உருவம் பயன்படுகிறது.

பணம் சம்பந்தமான காரியங்களில் ஈடுபடும் போது காளை மாட்டையோ அல்லது பசு மாட்டையோ காண நேர்ந்தால் நிச்சயமாக அன்றைய தினம் பண வரவு உண்டு. காளை மாட்டின் உருவத்தை பொம்மையாகவோ அல்லது படமாகவோ வீட்டில் வைத்திருந்தால் செல்வச்செழிப்பு உண்டாகும்.



செல்வத்தைக் குறிக்கும் கிரகமான சுக்கிரன் மீன இராசியில் உச்சமடைகிறார். மீன இராசி நீர் நிலையைக் குறிக்கும் இராசியாகும். அங்கே நீச்சமடையும் புதன் நீர்த் தாவரங்களைக் குறிக்கும். அங்கே உச்சமடையும் சுக்கிரன் மலர்ந்த தாமரைப் பூவைக் குறிக்கும். எனவே தண்ணீரில் பூத்துக்குலுங்கும் செந்தாமரை மலர் ஒரு செல்வக் குறியீடாகும். லக்சுமிக்கு செந்தாமரைச் செல்வி என்று பெயர். எனவே செந்தாமரை மலர் அல்லது செந்தாமரையில் வீற்றிருக்கும் லக்சுமியின் படத்தை வீட்டில் வைத்துத் தினமும் பார்த்து வர செல்வவளம் பெருகும்.



செல்வத்தைக் குறிக்கும் கிரகமான சுக்கிரன் உச்சமடையும் நட்சத்திரம் ரேவதியாகும். ரேவதி நட்சத்திரத்தின் உருவம் மீனாகும். எனவே வீட்டில் மீன் தொட்டியில் வைத்து மீன்களைப் பராமரித்து வந்தால், அது செல்வத்தை வசிகரிக்கும். மீன் வளர்க்க முடியாதவர்கள் மீன் படங்களை வீட்டில் வைக்கலாம்.

நீருக்கு செல்வத்தை வசீகரிக்கும் சக்தி உண்டு. செல்வக்கடவுளான லக்சுமியை அலைமகள் எனக் குறிப்பிடுவர். பாற்கடலை தேவர்களும், அசுரர்களும் இணைந்து கடைந்த போது அந்தப் பாற்கடலில் இருந்து தோன்றியவள் லக்சுமியாகும். கிட்டத்தட்ட எல்லா நாகரிகங்களும் ஆற்றங்கரையிலும் கடற்கரையிலும் தான் தோன்றியுள்ளன. எனவே வீட்டின் வடகிழக்குப் பாகத்தில் நீரைச்சேமித்து வைத்தால் அந்த வீட்டில் செல்வம் பெருகும்.

நீர்நிலையில் நின்றுகொண்டு சிறுநீர் கழிப்பது, மலம் கழிப்பது, நீரில் எச்சில் துப்புவது போன்ற செயல்கள் லக்சுமியை அவமதிப்பதாகும். அவர்களிடம் லக்சுமி இருக்கமாட்டாள்.

## கௌரவிப்பும் சான்றிதழ் வழங்கலும்

(சாவகச்சேரி)

வரணி கலாசார மத்திய நிலையத்தில் நடனக் கற்கையைப் பூர்த்தி செய்து தேசிய மட்டத்தில் முதலாம் இடம்பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் சுட்டிபுரம் அம்மன் கோவிலுக்கு அருகாமையிலுள்ள வரணி கலாசார மத்திய நிலையத்தில் நடைபெறும்.

அபிவிருத்தி சங்கத் தலைவரும் நிலையப் பொறுப்பதிகாரியுமான சி.மகிந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் திருமதி வினோஜிதா கௌசிகன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி அபிவிருத்திக் கழகத் தலைவர் பேராசிரியர் க.கந்தசாமி, கௌரவ விருந்தினர்களாக தென்மராட்சி ப.நோ.கூ.ச.தலைவர் இ.அ.ஆனந்தராசா, பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கப் பொது முகாமையாளர் க.அருட்செல்வம் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-114)

## கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியின் க.பொ.த.(உ/த) மற்றும் NVQ தகைமை உடைய மாணவர்களுக்கான டிப்ளோமா தர கற்கை நெறிகளுக்கு தகைமை உடைய மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

1. தொலைத்தொடர்பு தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா (Tele communication) NVQ மட்டம் 5 மற்றும் 6 முழுநேரம்.

2. நிர்மாண தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா (Construction Technology) NVQ மட்டம் 5 முழுநேரம் மற்றும் பகுதிநேரம்.

3. ஓட்டோமொபைல் (தன்னியக்க மோட்டார் வாகன) தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா (Auto mobile) NVQ மட்டம் 5 முழுநேரம் மற்றும் பகுதிநேரம்.

4. கணிய அளவையியல் தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா (Quantity surveying) NVQ மட்டம் 5 முழுநேரம்.

5. கணக்கியல் தேசிய டிப்ளோமா (Accounting) NVQ மட்டம் 5 மற்றும் 6 முழுநேரம்.

6. ஆங்கில ஆசிரியர் தேசிய டிப்ளோமா (Teaching English) NVQ மட்டம் 5 முழுநேரம்.

7. தொழில்நுட்பவியல் தேசிய சான்றிதழ் - மின்னியல் மற்றும் இலத்திரனியல் (NCT - Electrical & Electronics) NVQ மட்டம் 5 பகுதிநேரம்.

மேலும் உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியதான வெல்டிங் (Welding) மற்றும் மெசினிங் (Machining) போன்ற கற்கைகளும் ஆரம்பமாகவுள்ளன.

தகுதி யானவர்கள் தொழில்நுட்பவியல் கல்லூரியுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கு மாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

மேலதிக விபரங்களுக்கு கல்லூரியின் தொழில் வழிகாட்டல் நிலையத்துடன் (0212212403) தொடர்பு கொள்ளலாம் எனப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தின் இல்ல மெய் வல்லுநர் போட்டி இன்று 3 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அதிபர் ந.தயாளன் தலைமையில் இடம் பெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.பிரதேச செயலக கணக்காளர் எஸ்.அகிலன் கலந்து கொள்வார். (இ-5)

## இராசி பலன்

**மீனம்:** பகைவிலகி பாசம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள்.

**மேடம்:** கலகலப்பான செய்திகள் வந்துசேரலாம், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், சுபநிகழ்வுகளில் கலந்துகொள்ளும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**இடபம்:** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், கற்பனை மிகுதியான நாள்.

**மிதுனம்:** எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கும்பம்:** பெற்றோர் மீது பிரியம் கூடும், வளர்ச்சிப்பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், சுபதகவல்கள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

| | | | |
|---|---|---|---|
| | | சந் | ராகு |
| சுக்., புத | இராசி பலன் கிரகநிலை சந்திராஷ்டமம் சித்திரை, சுவாதி | | |
| சூரி | | | |
| சனி, கேது, குரு | செவ் | | |

03.02.2020
தை 20, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 6.36 மணிக்கு
நவமி மாலை 6.20 மணிவரை
கார்த்திகை முன்னிரவு 10.11 மணிவரை
சுபநேரம் 12.35-2.05 மணிவரை
இராகுகாலம் 8.05-9.35 மணிவரை
கார்த்திகை விரதம்
வாலிபம் இன்பத்தில் நிறையும்
வயோதிபம் கவலையால் நிறையும்
வளவன்

**கடகம்:** பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், வீட்டுத்தேவைகள் எளிதில் பூர்த்தியா கும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மகரம்:** எதிர்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பிள்ளைகளின் நலனில் அக் கறை காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்துசேரும் நாள், திருமண முயற்சிகள் முன்னேற்றம் தரும்.

**சிம்மம்:** செய்தொழிலில் மேன்மையுண்டு, அந்நியர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, ஆரோக்கியமான நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**தனுசு:** கடன்சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், வியாபார விரோதம் விலகும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், உடல்நலன் சீராகும்.

**விருச்சிகம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பணத்தேவைகள் பூர்த்தியாகும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், போசன சுகமுண்டு, கௌரவமான நாள்.

**துலாம்:** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாததுமாகவும் இருப்பது நல்லது, ஆரோக்கியம் சீராக அமைய ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

**கன்னி:** புதிய முயற்சிகள் கைகூடும், மறைமுக எதிர்ப்புகள் மாறும், பயணங்களால் பலனுண்டு, சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள். பெரியோர் சந்திப்புண்டு.

அகில இலங்கைக் கம்பன் கழகம் நடாத்தும்

# கம்பன் விழா-2020

திகதி:- 2020 ஜனவரி 31, பெப்ரவரி 1, 2, 3, 4 ஆம் திகதி
இடம்:- கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபம்
நேரம்:- காலை 9.30, மாலை 5.30

**03.02.2020 இன்றைய நிகழ்வுகள்**

காலை 9.30 மணி

**மங்கல விளக்கேற்றல்**
திரு.எஸ்.திருஞானசம்பந்தர் தம்பதியர்
(இளைப்பாறிய ஐ.நா.வதிவிடப்பிரதிநிதி)

**கடவுள் வாழ்த்து**
திரு.வி.கணேசலிங்கம்

**தலைமையுரை**
அதிவண. கலாநிதி எஸ்.ஜெபநேசன்
(முன்னாள் பேராயர், தென்னிந்தியத்திருச்சபை)

**தொடக்கவுரை**
டாக்டர் ஜின்னாஹ் ஷெரிப்புத்தின்

**சிந்தனை அரங்கம்**

தலைவர்: புலவர் மா.இராமலிங்கம்
பொருள்: "அறத்தின் ஆறு"

இராமனுக்கு விசுவாமித்திரர் உரைத்த அறம்
ந.விஜயசுந்தரம்
இராமனுக்கு வசிட்டர் உரைத்த அறம்
க.குமாரதாசன்
இலக்குவனுக்கு இராமன் உரைத்த அறம்
தி.வேல்நம்பி
பரதனுக்கு வசிட்டர் உரைத்த அறம்
ஸ்ரீ.பிரசாந்தன்
சுக்கிரீவனுக்கு இராமன் உரைத்த அறம்
இரா.செல்வவடிவேல்
இராவணனுக்கு வீடணன் உரைத்த அறம்
பாரதி கிருஷ்ணகுமார்

மாலை 5.30 மணி

**மங்கல விளக்கேற்றல்**
திரு. பொன்.விமலேந்திரன் தம்பதியர்
(அதிபர், யுனி ஆர்ட்ஸ்)

**கடவுள் வாழ்த்து**
திரு.ரி.கருணாகரன்

**தலைமையுரை**
கௌரவ.தி.சரவணபவன்
(மாநகர முதல்வர், மட்டக்களப்பு)

**தொடக்கவுரை**
மாண்புமிகு ஆறுமுகம் தொண்டமான்(பா.உ)
(கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சர்)

**கவியரங்கம்**

தலைவர்: "கலைமாமணி கவிஞர் பிறைசூடன்"
பொருள்: "கம்பனவன் கவிப்படகில் காலமெலாம் பயணிப்போம்..."

அன்பைப் பற்றி... – ச.முகுந்தன்
அறத்தைப் பற்றி... – த.சிவசங்கர்
அரசியலைப் பற்றி... – அலி அக்பர்
அறிவைப் பற்றி... – நாக.சிவசிதம்பரம்
அழகைப் பற்றி... – ஸ்ரீ.பிரசாந்தன்

**இலக்கிய ஆணைக்குழு**

ஆணையாளர்: "கௌரவ. 'டத்தோஸ்ரீ' எம்.சரவணன்
பொருள்: 'இலங்கையின் வீழ்ச்சிக்குக் காரணமானவர் எவர்'

சூர்ப்பணகையே! – ரி.ரெங்கராஜா
இராவணனே! – இரா.மாது
வீடணனே! – இரெ.சண்முகவடிவேல்



அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

# சுயநலத்திற்காக கல்வி கற்கக் கூடாது

# தலைமைத்துவப் பண்புகளுடன் மாணவர்கள் வளர்க்கப்பட வேண்டும்

## சிறீதரன் எம்.பி. இடித்துரைப்பு





(யாழ்ப்பாணம்)


**தலைமைத்துவப் பண்புகளுடன் எமது இளைஞர்களும் மாணவர்களும் வளர்க்கப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.**

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், மாணவர்கள் சுயநலத்திற்காக கல்வி கற்கக்கூடாது. உங்களை நம்பித்தான் இந்த தேசமும் இனமும் இருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டு தன்னம்பிக்கையுடன் கல்வியைக் கற்பதுடன் விளையாட்டிலும் அதே உணர்வுடன் ஈடுபடுவீர்களாயின் நீங்கள் இந்த பூமிப்பந்திலே வெற்றி பெற்ற மனிதர்களாக மாறுவீர்கள். எங்கள் இனத்திற்கும் தேசத்திற்கும் தலைமைத்துவத்தை வழங்க முடியும் என்ற தன்னம்பிக்கையுடன் கல்வியைத் தொடருங்கள் எனவும் ஆசிரியர்களும் பெற்றோர்களும் மாணவர்களை தலைமைத்துவப் பண்புள்ளவர்களாக வளர்த்தெடுக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் புஷ்பரட்ணம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதேச சபை உறுப்பினர் ஜோன் ஜிப்பிரிக்கோ, அயற் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ-7)

# நீதிமன்ற வளாகத்தில் கொலை அச்சுறுத்தல் கஞ்சிபான இம்ரான் மீது முறைப்பாடு பதிவு



(கொழும்பு)

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாதாள உலகக் குழு உறுப்பினர் கஞ்சிபான இம்ரான் என அழைக்கப்படும் மொஹமட் நஜீவ் மொஹமட் இம்ரான் கொழும்பு நீதிமன்ற வளாகத்தில் மற்றுமொரு சந்தேகநபருக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்ததாக கொழும்பு பிரதான நீதவான் லங்கா ஜயரத்னவிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

பாதாள உலகக் குழு உறுப்பினரான கஞ்சிபான இம்ரான் வழக்கு விசாரணைக்காக கொழும்பு நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் மீண்டும் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லும் சந்தர்ப்பத்தில் இவ்வாறு அச்சுறுத்தல் விடுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் சிறைச்சாலை பாதுகாப்பு அதிகாரிகளின் பாதுகாப்பின் கீழ் இருந்த சந்தர்ப்பத்திலேயே அவர் கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரை கொலை செய்ய திட்டம் தீட்டியமை தொடர்பாக மஹர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவருக்கு இவ்வாறு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும்

(கண்டி)

புதிய அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நாட்டில் அபிவிருத்தி செயல்பாடுகள் முன்னெடுக்கப்படவில்லை என்று இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

கண்டியில் நேற்று ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த போது அவர் இதனை தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)



# மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்க வேண்டும் தனித்துப் போட்டியிடும் நோக்கம் எமக்கு இல்லை

(கொழும்பு)

பொதுத்தேர்தலில் தனித்துப் போட்டியிடுவது எமது நோக்க மல்ல. அனைத்துப் பங்காளிக் கட்சிகளுடனும் கூட்டணியமை த்தே தேர்தலை வெற்றி கொள் வோம் என சர்வதேச உறவுகள் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்தார்.

அத்துடன் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் அரசாங்கம் தோற்றம் பெறா விடின் முரண்பாடுகள் மாத்தி ரமே மிகுதியாகும்.

எனவே முன்னர் விட்ட தவறை திருத்திக் கொள்வது அவசியமாகும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெர முன இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலில் பங்காளிக் கட்சிக ளுடன் கூட்டணியமைத்தே போட் டியிடும். சின்னம் தொடர்பில் எவ்வித முரண்பாடுகளும் கிடை யாது. ஆளும் தரப்பை பலவீ னப்படுத்தும் எதிர்க்கட்சியின் முயற்சிகள் வெற்றி பெறாது.

தேர்தலை வெற்றி கொள்வ தற்கான அனைத்து நடவடிக்கை களும் பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ தலை மையில் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின் போதே அவர் மேற்கண் டவாறு தெரிவித்தார். (இ-7)




# அபிவிருத்திக்கு உதவத்தயார்

## பின்லாந்து தூதுவர் உறுதி



(வாழைச்சேனை)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அபிவிருத்தியை மேற்கொள்வ தற்கு பின்லாந்து அரசாங்கம் சகல வழிகளிலும் உதவுவதற்குத் தயாராகவுள்ளதாக இலங்கைக் கான பின்லாந்து தூதுவர் ஹரி மெகரீனன் தெரிவித்தார்.

கடற்றொழில் நீரியல் வளங் கல் அமைச்சால் இலங்கைக் கான பின்லாந்து தூதுவராலயத் திற்கு விடுக்கப்பட்ட வேண்டு கோளின் அடிப்படையில் வாழைச் சேனை மீன்பிடித் துறைமுக த்தை அபிவிருத்தி செய்யும் நோக் கில் இலங்கைக்கான பின்லாந்து தூதுவருக்கும் மாவட்ட அரச அதிபர் கலாமதி பத்மராஜாவுக் கும் இடையில் மாவட்டச் செயல கத்தில் கடந்த வெள்ளிக்கிழமை சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது, இலங்கைக் கான விஜயத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில்தான் பல்லின சமூகங்களும் ஒன்றிணைந்து வாழ்கின்றதைப் பார்ப்பதாக பின்லாந்து தூதுவர் தெரிவித்தார்.

மேலும், மாவட்டத்தில் இருக் கின்ற மீன் வளத்தை நவீன முறையில் அபிவிருத்திசெய்து பெறுமதிவாய்ந்த சந்தையை உருவாக்கி மீனவர்களுக்கான முழுமையான பயன்பாட்டினைப் பெற்றுக்கொடுப்பதற்கு பின்லாந்து அரசாங்கம் முழுமையான ஒத்து ழைப்பை இலங்கை அரசாங்கத் திற்கு ஊடாக செய்துகொடுக்கும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# இலங்கை வரும் அனைவரையும் விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்க மூவர் கொண்ட குழு

(கொழும்பு)

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் மூலம் தினமும் இலங்கைக்குள் நுழை யும் அனைத்து நபர்களையும் விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்க மூன்று பேர் கொண்ட குழு வொன்று நியமிக்கப்பட்டது.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக உலக சுகாதார ஸ்தா பனம் பிரகடனப்படுத்தியுள்ள அவசரகால நிலையைக் கருத் திற்கொண்டே இந்த நடவடி க்கை எடுக்கப்பட்டதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாய கம் அனில் ஜயசிங்க தெரிவித் தார்.

இந்தக் குழுவில் சுகாதார அமைச்சின் பேரிடர் மேலாண் மைப் பிரிவின் வைத்தியர், விமான நிலையம்மற்றும்விமான சேவைகளின் பிரதிநிதி மற்றும் குடிவரவு மற்றும் குடியகல்வு துறையின் பிரதிநிதி ஆகியோர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இதன்மூலம் தற்போதைய நிலைமையைக் கண்காணிப் பதில் ஒரு சுமுகமான செயற்பா ட்டை உறுதி செய்வதற்காக அனைத்து சேவைகளையும் ஒன்றிணைக்க முடியும் என் றும் அவர் மேலும் தெரிவித் தார். (இ-7)

# உரிமையாளர்களை மிரட்டிவிட்டு மணல் கொள்ளை தொடர்கிறது

(யாழ்ப்பாணம்)

அரியாலை உதயபுரம் பகுதி யிலுள்ள தனியார் காணிகளில் இரவு வேளைகளில் சட்டத்துக்குப் புறம்பாக மணல் அகழ்வு இடம் பெறுகிறது என அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இரவு வேளையில் அத்து மீறி நுழையும் மணல் கொள் ளையர்கள் காணி உரிமையா ளர்களை அச்சுறுத்திவிட்டு உழ வியந்திரங்கள், கனரக வாகன ங்கள் மூலம் மணல் கடத்தலில் ஈடுபடுவதாக தெரிவித்தனர்.

பொதுமக்களின் முறைப்பாட் டையடுத்து யாழ்ப்பாணம் மாவ ட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் ஆலோசனைக்கமைய சிறப்பு பொலிஸ் குழுக்கள் அரியாலை, உதயபுரம், பூம்புகார் மற்றும் நாவ லடி பகுதிகளில் 24 மணி நேரமும் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடு த்தப்பட்டுள்ளன. இதேவேளை நேற்று அதிகாலை குறித்த பகுதிக ளுக்குச் சென்ற யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் நிலை யப் பொறுப்பதிகாரி தலைமை யிலான பொலிஸ் குழுவினர் மணல் அகழ்வில் ஈடுபடும் நபர்களை கைது செய்ய காத்திருந்த போதும் மணல் கொள்ளையர்கள் அங்கு வரவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# கொரோனா தாக்கம்; தங்கவிலை அதிகரிப்பு

(வோஷிங்டன்)

உலக சந்தையில் தங்க விலை பாரியளவு அதிகரித்துள்ளதாக புதிய புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவித்தன.

கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பரவி வருகின்றமை யால் அதன் தாக்கம் தங்கத்தின் விலையை அதிகரிக்க செய்துள் ளதாக பொறியியல் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 1500 அமெரிக்க டொலர் வரை நேற்று அதிகரித்தது. (ஜ)

# மாணவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்கக்குழு

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர் களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க குழு வொன்று அமைக்கப்பட்டுள்ள தாக உயர்கல்வி அமைச்சர் பந் துல குணவர்த்தன தெரிவித்தார்.

அந்தக் குழு மாணவர்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய் ந்து இரண்டுவார காலத்திற்குள் தமது பரிந்துரைகளை முன் வைக்கும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக் களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பி லேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)





தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி இல்ல மெய்வல்லுநர் போட்டி நேற்று முன்தினம் கல்லூரி அதிபர் ம.மணிசேகரம் தலைமையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன் கலந்து கொண்டார். (படங்கள்:- ஈச்சமோட்டை செய்தியாளர்)




யாழ்.கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் அதிபர் த.தயானந்தன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக வடமாகாண உதவிக்கல்விப் பணிப்பாளர் அ.சிவனருள்ராஜா, சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (உடற்கல்வி) ந.கஜேந்திரன், கௌரவ விருந்தினராக ஓய்வுநிலை சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் நா.அரியபுத்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இன ஒற்றுமையை வலியுறுத்தி யாழிலிருந்து கொழும்பு வரை மாற்றுத்திறனாளிகள் மூவர் சக்கர நாற்காலிப் பயணம்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் இன ஒற்றுமையை வலுவடையச் செய்யும் நோக்கில் மாற்றுத்திறனாளிகளான மூவர் யாழிலிருந்து கொழும்பு வரை சக்கர நாற்காலிப் பயணத்தை நேற்று முன்தினம் ஆரம்பித்தனர்.

மொகமட் அலி, எஸ்.ஜெகதீஸ்வரன் மற்றும் ஏ.பிறேமசந்திர ஆகிய மாற்றுத்திறனாளிகள் இணைந்து குறித்த பயணத்தை ஆரம்பித் துள்ளனர்.



இன ரீதியான நல்லிணக்கத்தை இந்த நாட்டில் அனைவரும் பின்பற்ற வேண்டும். மாற்றுத்திறனாளிகள் சமூகத்தில் ஏனையோர் அனுபவிக்கும் சகல உரிமைகள் சலுகைகளையும் அனுபவிக்க வழி சமைக்க வேண்டும், நாட்டிலுள்ள சகல மாற்றுத்திறனாளிகளுக்கும் மாதாந்த கொடுப்பனவு 5000 ரூபாவை வழங்கி வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். மாற்றுத்திறனாளிகளுக்கு சமூக, சமய, கலாசார விளையாட்டு கல்வி பொருளாதார விடயங்களில் சமவாய்ப்பு, சம அந்தஸ்து வழங்கப் படவேண்டும். அனைவருக்கும் அணுகு வசதிகளை பொது நிறுவனங்கள், அரங்கு மேடைகள், பொது மலசல கூடங்கள், பொதுப்போக்குவரத்துகள், பொதுக்கட்டடங்கள், அலுவலகங்கள், வைத்தியசாலைகள், சேவை மையங்கள், போககுவரத்து தரிப்பிடங்கள் என சகல துறைகளிலும் அணுகு வசதி ஏற்படுத்தப்பட வேண்டும். வங்கிகள், வைத்தியசாலைகள் போன்ற சேவை பெறும் மையங்களில் எமக்கு முன்னுரிமை வழங்க மாற்றுத்திறனாளிகளுக்கான விசேட அடையாள அட்டை வழங்கப்பட வேண்டுமென மூவராலும் ஜனாதிபதிக்கு வழங்கப்பட உள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

# இ.த.மு.முன்னணி என்ற புதிய கட்சி நேற்று ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கைத் தமிழர் முற்போக்கு முன்னணி எனும் புதிய அரசியல் கட்சி ஒன்று மட்டக்களப்பில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

மட்டக்களப்பு - களுவாஞ்சிக்குடி, இராசமாணிக்கம் மண்டபத்தில் நேற்று இந்த அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது கட்சியின் எதிர்கால செயற்பாடுகள், நிர்வாகக் கட்டமைப்புக்கள், எதிர்வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவது உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் விளக்கவுரைகள் இடம்பெற்றன.

இலங்கைத் தமிழர் முற்போக்கு முன்னணி கட்சியின் தலைவராக முன்னாள் பிரதியமைச்சர் சோமசுந்தரம், செயலாளர் கண பதிப்பிள்ளை சிறிஸ்குமார், பொருளாளர் தருமரெட்ணம் தயானந்தன், தேசிய அமைப்பாளர் பேராசியரியர் ம.செல்வராசா, பிரதேச, மாவட்ட, மாகாண மற்றும் இணைப்பாளர்கள் இதன் போது அறிமுகம் செய்யப்பட்டனர்.

இந் நிகழ்வில் முன்னாள் பிரதியமைச்சர் கணேசமூர்த்தி, கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் ம.செல்வராசா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.(ஐ)

# தேரர்கள் நினைத்தால் தேசிய நல்லிணக்கத்தை அர்த்தமுள்ளதாக மாற்றலாம்

## அமைச்சர் டக்ளஸ் நம்பிக்கை

(குப்பிழான்)



யாழ். நாகவிகாரையைச் சேர்ந்த ரத்ன தேரர் தமிழ் மொழியில் உரையாற்றி எங்களுக்கு ஒரு நம்பிக்கையைத் தந்திருக்கின்றார். அவரது முன்மாதிரியான அணுகுமுறையை ஏனைய தேரர்களும் பின்பற்றுவார்களானால் தேசிய நல்லிணக்கத்தை அர்த்தமுள்ளதாக மாற்ற முடியும் என கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தினார்.

வட இலங்கை சமாதான நீதவான் சங்கத்தின் மலர் வெளியீடும், கௌரவிப்பு நிகழ்வும் நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டபத்தில் இடம் பெற்றது.

இவ் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், பிரதமர் மகிந்த ராஜபக்சவும் இணைந்து கடற்றொழில் அமைச்சர் பதவியை எனக்கு வழங்கியுள்ளனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நான் எதிர்பார்த்தவளவுக்கு எமது மக்கள் என் ஆதரவு வேட்பாளருக்கு வாக்களிக்கவில்லை.

இதன்காரணமாக முதலில் இந்த அமைச்சுப் பொறுப்பை எடுக்கின்ற நோக்கம் எனக்கிருக்கவில்லை. இந்த நிலையில் பலருடைய அழுத்தங்கள் மற்றும் கோரிக்கைகள் காரணமாகத் தான் நான் இந்த அமைச்சுப் பதவியை பொறுப்பெடுத்துள்ளேன்.

இன்று (நேற்று) காலை கூட யாழிலுள்ள மூன்று ஏரிகளில் இருபது இலட்சம் இறால் குஞ்சுகளை விட்டிருக்கின்றோம். இன்னும் மூன்று மாதங்களில் பலரதும் வாழ்வாதாரத்தை முன்னேற்றக் கூடிய வகையிலும் இந்தப் பகுதியின் போஷாக்கை மேலும் வலுப்படுத்தக் கூடிய வகையிலும் இந்த நடவடிக்கை அமையும்.

அதேபோன்று இந்த அமைச்சுக்கு ஊடாகப் பல வேலைகளை எமது மக்களின் சிறப்பான, நம்பிக்கையான எதிர்காலத்துக்காக இன்னும் பல திட்டங்களைச் செயற்படுத்த முடியுமெனவும் நம்புகின்றேன்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும், பிரதமர் ராஜபக்ஷவுக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-18)



வட இலங்கை சமாதான நீதவான் சங்கத்தின் மலர் வெளியீடும், கௌரவிப்பு நிகழ்வும் நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டபத்தில் இடம்பெற்றது. இச்சங்கம் ஆரம்பித்து ஓராண்டு நிறைவை முன்னிட்டு சமாதான தீபம் மலர் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா வெளியீடு செய்து வைக்க முதற்பிரதியை கலாநிதி- திருமதி. செல்லத்துரை இராஜேஸ்வரி பெற்றுக் கொள்வதையும், சமாதான நீதவான்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்படுவதையும், விழாவில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- செ.ரசிசாந்)

# உறவுகளை தொலைத்த தேசத்தில் சுதந்திரமா?

# பொறுப்புக் கூறாதவரை எமக்கு அது கரிநாளே!

## வடக்கு– கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**இந்த தேசத்தின் மக்களான எமது உறவுகள் இதே மண்ணில் போரின்போதும் அசாதாரண சூழலில் சரணடைந்தும், கையளிக்கப்பட்டும் வலிந்து காணாமலாக்கப்பட்டுள்ளார்கள்.அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிவதற்காக நாம் தொடர்ந்தும் போராடிக் கொண்டிருக்கின்றோம். இதுவரையில் அவர்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியாத நிலையே நீடிக்கின்றது.எமக்கான பொறுப்புக்கூறல் செய்யப்படவே இல்லை. இவ்வாறான நிலையில் இந்த தேசத்தின் சுதந்திர தினம் என்பது எமக்கு கரிநாளே என வடக்கு- கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கண்ணீருடன் தெரிவித்துள்ளனர்.**



இலங்கையின் சுதந்திரதினத்தை முன்னிட்டு வடக்கு- கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர் சங்க தலைவி ம.கனகரஞ்சினி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

வலிந்து காணாமலாக்கப்பட்ட எமது உறவுகளை நாம் தெருத் தெருவாக சென்று தேடிக் கொண்டிருக்கின்றோம். சிறைகளிலும், இரகசிய முகாம்களிலும் இருப்பதாக கூறியபோதெல்லாம் அங்கும் தேடுவதற்கு எம்மாலான அனைத்து முயற்சிகளையும் எடுத்திருந்தோம். போர் நிறைவடைந்து இற்றைக்கு பத்து ஆண்டுகளாகி விட்டன. ஆனால் எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை எம்மால் அறிய முடிவில்லை.

போரின் பின்னர் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்த ராஜபக்ஷ அரசும் சரி, மைத்திரி-ரணில் அரசும் சரி எமது விடயத்தில் எவ்விதமான கரிசனையும் கொண்டிருக்கவில்லை. எம்மையும், சர்வதேசத்தினையும் ஏமாற்றுவதற்காக ஆணைக்குழுக்களையும், அலுவலகங்களையும் அமைத்து நாடகங்களையே அரங்கேற்றி வந்துள்ளார்கள்.

இந்நிலையில் தற்போதைய ஆட்சியாளரான கோட்டாபய ராஜபக்ஷ காணாமலாக்கப்பட்டவர்கள் "காணாமலாக்கப்பட்டவர்களே" என்று கூறி முன்னோக்கிச் செல்வதற்கு சிந்திக்குமாறு குறிப்பிடுகின்றார்.

எமது உறவுகள் திட்டமிட்டே காணாமலாக்கப்பட்டனர். குறிப்பாக போரின் இறுதியில் விடுதலைக்காக ஆயுதமேந்திய எமது உறவுகளை சரணடையுமாறு இலங்கை அரசு கோரியது. தற்போதைய ஜனாதிபதியான கோட்டாபய அப்போது பாதுகாப்புச் செயலாளராக பணியாற்றிக் கொண்டிருந்தபோது அவரது பணிப்பிலேயே அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அதன்பின்னரே வட்டுவாகலிலும், ஓமந்தையிலும் எமது உறவுகள் இலங்கை இராணுவத்திடம் சரணடைந்தார்கள், சிலர் கையளிக்கப்பட்டார்கள். அதற்கு சாட்சியாக நாமே உள்ளோம். அவ்வாறு கையளிக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதை மறுதலிக்க முடியாது.

விசேடமாக தற்போதைய ஜனாதிபதி இந்த விடயத்தில் நழுவிச் செல்லவே முடியாது. உத்தரவுகளை பிறப்பித்த அவரே பொறுப்புக்கூற வேண்டியவர் ஆவார். இதனை அனைத்து தரப்பினரும் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

குறிப்பாக சர்வதேச தரப்பினரும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையினரும் இந்த விடயத்தில் தெளிவான நிலைப்பாடொன்றை எடுக்க வேண்டியுள்ளது. இலங்கை அர சாங்கத்தின் பொறுப்புக்கூறலைச் செய்வதற்காக உரிய அழுத்தங்களை வழங்க வேண்டும்.

மிக முக்கியமாக, இலங்கை அரசாங்கத்தினை சர்வதேச நீதிமன்றத்தின் முன்னாலோ அல்லது விசேட தீர்ப்பாயமொன்றையோ அமைத்து நீதியைப் பெற்றுக் கொள்வதற்கான உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். தற்போதைய சந்தர்ப்பத்தில் சர்வதேச சமூகம் பாதிக்கப்பட்ட எம்மை முன்னிலைப்படுத்திய தீர்மானமொன்றினை அவசரமாக எடுக்காது விட்டால் பொறுப்புக்கூறல் என்பது கானல் நீராகி விடும் ஆபத்தே உள்ளது.

இலங்கை அரசு பெரும் எடுப்பில் எத்தனை சுதந்திர தினங்களைக் கொண்டாடினாலும் வலிந்து காணாமலாக்கப்பட்ட எமது உறவுகள் மீளக் கிடைக்காத வரையில் எமக்கு அது கரிநாளாகவே இருக்கும் என்பதை நாம் அழுத்தமாக தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (9)

## சிறுவர்களுக்கான விழிப்பூட்டல் கருத்தமர்வு

(மன்னார்)



மன்னார் கறிற்றாஸ்-வாழ்வுதயத்தின் ஏற்பாட்டில் "இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்" எனும் தொனிப் பொருளில் சிறுவர்களுக்கான விழிப்பூட்டல் கருத்தமர்வு நேற்று முன்தினம் மன்னார் கறிற்றாஸ்-வாழ்வுதய கேட்போர் கூடத்தில் அதன் இயக்குநர் அருட்தந்தை எஸ். அன்ரன் அடிகளார் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் இயக்குநர் அருட் தந்தை எஸ். அன்ரன் அடிகளார் உரையாற்றுகையில்,

சிறுவர்களாகிய உங்களுக்கு கிடைக்கும் சந்தர்ப்பங்களை பயன்படுத்தி பிள்ளைகள் முன்னேற்றம் அடைய வேண்டும். பிள்ளைகளின் எதிர்காலத்தில் பெற்றோர்களின் பங்களிப்பு மிக முக்கியமானது.

பிள்ளைகளின் கல்வி சார் முன்னேற்ற அறிக்கையினை பெற்றோர்கள் ஒவ்வொரு தவணையும் பரிசீலனை செய்து பார்ப்பது மிக முக்கியமானதா கும் என தெரிவித்தார்.

குறித்த கருத்தமர்வில் கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் திட்ட இலக்கு கிராமங்களில் இருந்து சுமார் 200 ற்கும் மேற்பட்ட சிறுவர்கள் கலந்து கொண்டனர். இவர்களோடு பெற்றோர்கள் சிலரும் கலந்து கொண்டனர். குறித்த செயலமர்விற்கு வள வாளராக மன்னார் பிரதேச செயலகத்தின் சமூக சேவைகள் பிரிவு பொறுப்பதிகாரி சந்திரபோஸ் கலந்து கொண்டார். (9-285)

## வவுனியாவை சென்றடைந்த சக்கர நாற்காலி பயணம்




(நெளுக்குளம்)

யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில் இருந்து ஆரம்பித்த சக்கர நாற்காலி பயணமானது நேற்று வவுனியாவை சென்றடைந்தது. முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்ட ம.மொகமட் அலியுடன் ஜெகதீஸ்வரன், பிறேமசந்ர ஆகியோர் மாற்றுத்திறனாளிகளுக்கான தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதற்காகவும், மும்மதங்களுக்கிடையிலான சமூக நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்காகவும் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை முழுவதுமான சுற்றுப்பயணம் சுதந்திரதினம் அன்று கொழும்பை சென்றடையவுள்ளது.

வவுனியாவை சென்றடைந்த மூவரையும் புதிய பேருந்து நிலையத்தில் வைத்து வவுனியா மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.எஸ்.வாசன்,தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் கண்ணன், வர்த்தக பிரதிநிதிகள், பொதுமக்கள் , பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள்,சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு வாழ்த்தியிருந்தார்கள். அவர்களின் செலவுக்காக தமிழ் விருட்சம் அமைப்பினர் 10.000 ரூபாவையும், வவுனியா வர்த்தக சங்கத்தினர் ரூபா 10.000 வழங்கி இருந்தனர். (9-250-299)

## முதிரை குற்றிகள் மீட்பு



(தருமபுரம்)

பூநகரியிலிருந்து கிளிநொச்சி பகுதியிலுள்ள ஓர் மரக்காலைக்கு சட்டவிரோதமான முறையில் கொண்டுவரப்பட்ட 15 முதிரைக் மரக்குற்றிகள் கிளிநொச்சி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டக் குற்றத்தடுப்பு பிரிவினர் நேற்று குறித்த பகுதியில் சென்ற வாகனத்தில் சோதனை செய்துள்ளனர். அப்போது சாரதி தப்பி ஓடியதால் பொலிஸார் மரக்குற்றிகளை கைப்பற்றியுள்ளனர். (9-316)






**சுதந்திர தினத்தை முன்னிட்டு, தொற்றுகளில் இருந்து மக்களை பாதுகாக்கும் நோக்குடன், முல்லைத்தீவு மாவட்டப் படைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில், 59 ஆவது படைப் பிரிவினரால், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில், நேற்று முன்தினம் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது.**

# மாவட்டங்கள் தோறும் முகவர்கள் களமிறக்கப்பட்டு சிறுபான்மை சமூகத்தை மலினப்படுத்த முயற்சி

## முன்னாள் அமைச்சர் ரிஸாட் பதியுதீன் தெரிவிப்பு

(மன்னார்)

மாவட்டங்கள் தோறும் அரசியல் வியாபார முகவர்களை களமிறக்கி, சமூக வாக்குகளை சிதைத்து சின்னா பின்னமாக்குவதன் மூலம், தமது குறிக்கோளை அடையும் முயற்சிகள் அரங்கேற்றப்பட்டுள்ளதாக முன்னாள் அமைச்சர் ரிஸாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

முசலியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம் பெற்ற மக்கள் சந்திப்பின் போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்று கையில்,

களமிறக்கப்படும் வேட்பாளர்கள் வெற்றி பெற மாட்டார்கள் என துல்லியமாக தெரிந்த போதும், இந்தக் களப்பரீட்சையில் அவர்கள் இறக்கப்படுவதன் காரணம், சிறுபான்மை மக்களின் ஆதரவின்றி எவ்வாறாவது ஆட்சியை நிலை நிறுத்திக் கொண்டால், தாங்கள் விரும்பியபடி அரசாங்கத்தை கொண்டு செல்லலாம் என நினைப்பதனாலேயாகும்.

யுத்தம் முடிவின் பின்னர், நாம் இங்கு வந்த போது, கிராமங்கள் ஒவ்வொன்றும் ஒன்றுடன் ஒன்று பின்னிக்கிடந்தன. அடையாளம் கண்டுகொள்ள முடியாமல் இருந்தது. அவற்றை வேறுபடுத்துவதிலும் எல்லையிடுவதிலும் பாரிய கஷ்டங்கள் இருந்தன. அத்துடன், மக்களை மீளக்குடியேற்றுவதிலும் கட்டடங்களை மீள அமைப்பதிலும் நாம் சவால்களை எதிர்கொண்டோம்.

வாழ்விடங்களை இழந்த மக்களை மீளக்குடியேற்றி அடிப்படை வசதிகளை செய்து கொடுத்தோம்.

அத்துடன், அன்றாடம் வாழ்வதற்குத் தேவையான வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம் என்ற மனநிறைவு எமக்கு இருக்கின்றது. இத்துடன் எமது பணி நின்றுவிடவில்லை. புதிய புதிய கிராமங்களை உருவாக்கி எதிர்கால சந்ததியினரின் வாழ்வுக்கு வித்திட்டோம்.

தற்போது தேர்தல் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டவர்கள் இந்தப் பிரதேசத்துக்கு தலைகாட்டத் தொடங்கியுள்ளனர். தாங்கள் வெற்றிபெறப் போவதில்லை என தெளிவாகத் தெரிந்திருந்தும், வன்னி மாவட்டத்தில் எம்.பியாக இருக்கும் என்னை இல்லாமலாக்குவதே அவர்களின் பிரதான இலக்கு.

இனவாத தேரர்களுக்கும் இதுவேதான் தேவை. சமூகத்தின் குரல்வளையை நசுக்குவதே இவர்களின் நோக்காக இருக்கின்றது" என மேலும் தெரிவித்தார். (9)



# கடமைக்கு இடையூறு விளைவித்த வர்த்தகர் விளக்கமறியலில்

(மன்னார்)

மன்னார்-மடு பகுதியில் அரச கடமைக்கு இடையூறாக செயற்பட்ட வர்த்தகர் ஒருவரை எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் அமைந்துள்ள பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகஸ்தர்கள் கடந்த வியாழக்கிழமை வர்த்தக நிலையங்களுக்கான இரகசிய சுற்றிவளைப்பு நட வடிக்கையினை மேற்கொண்டனர்.

குறித்த நடவடிக்கையின் போது மடு திருத்தலத்தின் பிரதான நுழைவாயில் பகுதிக்கு அண்மையில் அமைந்துள்ள கடைத்தொகுதியில் கடை ஒன்றில் பரிசோதனைகளை மேற்கொள்ள உத்தியோகத்தர்கள் சென்றுள்ளனர்.

இதன் போது குறித்த கடை ஒன்றின் உரிமையாளர் தகாத வார்த்தைகளினால் பேசி,கூரிய ஆயுதத்தினால் குறித்த உத்தியோகத்தர்களை தாக்க முற்பட்டுள்ளதோடு, அவர்களின் கடமைக்கும் இடையூறை ஏற்படுத்தியுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக குறித்த உத்தியோகத்தர்கள் மடு பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கிய நிலையில் மடு பொலிஸார் குறித்த பகுதிக்கு வந்து கடையின் உரிமையாளரை கைது செய்தனர்.கைது செய்யப்பட்ட குறித்த நபர் கடந்த வெள்ளிக்கிழமை(31) மன்னார் நீதி மன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்.

இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் குறித்த சந்தேக நபரை எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (9)




# மண்டபம் அமைப்பு

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைபற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கணுக்கேணி சீ.சீ.தமிழ்க்கலவன் பாடசாலைக்கான விளையாட்டு மைதான மண்டபம் ஒன்றை வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், அமைத்துக் கொடுத்துள்ளார். பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் ஒரு இலட்சம் ரூபா செலவில் இம் மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

இம்மண்டபம் அமைப்பதற்கான ஒழுங்கினை கரைதுறைபற்று பிரதேச சபை உறுப்பினர் த.அமலன் மேற்கொண்டிருந்தார். (9-350)

# இலங்கையின் சுதந்திர தினம் சிறுபான்மை சமூகத்துக்குரியது அல்ல

## தமிழ் இளையோர் மக்கள் இயக்கம்

(கிளிநொச்சி)

இலங்கையின் சுதந்திர தினம் சிறுபான்மை சமூகத்துக்குரியது அல்ல.மாறாக இந்த தினத்தை சிறுபான்மை சமூகம் கறுப்பு தினமாகவே அனுஸ்டிக்க முடியும் என தமிழ் இளையோர் மக்கள் இயக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு அவர்கள் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில்,

இலங்கை நாடு மேலைத் தேசத்தவர்களின் ஆட்சியிலிருந்து விடுபட்டு 72 ஆண்டுகளை கடந்து விட்ட போதிலும் இலங்கைத்தீவு சுதந்திரம் அடைந்ததாக சிறுபான்மை சமூகத்தவரான எம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை காரணம் இத்தீவில் வசிக்கின்ற சிறுபான்மை இனத்தை சார்ந்தவர்கள் சுதந்திரம் என்ற சொல்லை பெயரளவில் மாத்திரமே உணர்கின்றார்கள்.

1815 இல் இலங்கை முழுவதையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த பிரித்தானியர்களால் சமூகத்தில் பல விரும்பத்தகாத மாற்றங்கள் ஏற்பட்டன. இந்நிலையில் தம்மவர்களின் தனித்துவத்தை பேணுகின்ற வகையில் தமிழர்,சிங்களவர்கள், முஸ்லீம்கள் என்ற வேறுபாடுகளை எல்லாம் கடந்து காலணித்துவ ஆட்சிக்கு எதிராக எம்மவர்கள் போராடி இறுதியில் வெற்றியும் பெற்றார்கள். இவர்கள் பெற்ற வெற்றி என்பது சிறுபான்மை சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாததாக பின்னாளில் விளங்கியது என்பதே நிதர்சனம்.

இலங்கை சுதந்திரம் அடைந்ததற்கு பின்னர் இரு இனங்களுக்கிடையிலான உள்நாட்டு யுத்தம் இடம்பெற்று 10 ஆண்டுக்ள் கடந்து விட்ட போதிலும் தமிழினம் எதிர்நோக்கும் அவலங்கள் சொல்லில் அடங்காதவை. தற்போது எமது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் காலணித்துவ ஆட்சியில் எமது மக்கள் எதிர்நோக்கிய பிரச்சனைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது தற்போதுள்ள நிலையை விட காலனித்துவ ஆட்சியில் எமது மக்கள் சுதந்திரமாகவே வாழ்ந்தார்கள் என்பது புலப்படுகின்றது.

அனைத்தையும் இழந்து இன்று வீதிகளில் ஏதிலிகளாக நிற்கும் ஓர் இனம் எவ்வாறு பெப்ரவரி 4 தமது நாட்டின் சுதந்திர தினமாக ஏற்றுக் கொள்ளும்? தமது சொந்த நிலத்தில் குடியேற முடியாமல் போராடுகின்ற மக்களும் தமது பிள்ளைகள் மற்றும் தமது உறவினர்களுக்கு என்ன நடந்தது அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்ற வினாக் களுடன் வீதிகளில் இறங்கி போராடுகின்ற உறவுகளின் அவல வாழ்வும், பல வருடங்களாக சிறையில் அவல வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கின்ற அரசியல் கைதிகளின் நிலை, எமது வழிபாட்டு தலங்கள் மற்றும் தொன்மங்கள் ஆக்கிரமிக்கப்படு வதைதடுக்க முடியாதவர்களாகவும், மகாவலி அபிவிருத்தி என்ற பெயரில் தமிழரின் பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்படுவது.பல தசாப்த காலத்திற்கு மேலாக ஏன் யுத்தம் நிறைவடைந்து 10 ஆண்டுகள் கடந்த போதிலும் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படாமை, புதிது புதிதாக ஆட்சிப் பீடம் ஏறுகின்ற அரச தலைவர்கள் ஒற்றையாட்சியை ஏற்றுக் கொள்வதுடன் சிறுபான்மை மக்களின் உரிமைகள் தொடர்பில் எதுவித கரிசனையும் கொள்ளாமை. என ஒரு இனம் நின்மதியை இழந்து அவலத்துடனும் மீளாத்துயரத்துடனும் தமக்கு இவற்றுக்கெல்லாம் எப்போது விடிவு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்போடு நாட்களை கடத்திக் கொண்டிருக்கும் எம்மவர்களால் எப்படி பெப்ரவரி 04 இலங்கையின் சுதந்திர தினமாக ஏற்றுக்கொள்ளமுடியும்.மாறாக இந் நாளை கறுப்பு தினமாகவே அனுஸ்டிக்க முடியும்.

நமது மக்களின் துயர் தோய்ந்த வாழ்வுக்கு விடிவு கிடைத்து சிறுபான்மை சமூகத்தின் அபிலாசைகள் அவர்களின் உரிமைகள் என்பன எந்த நாளில் வென்றெடுக்க படுகின்றனவோ அந்த நாளே எம் மக்களின் சுதந்திர தினமாக இருக்கும் என்பதில் எதுவித ஐயமுமில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. (9)

# வவுனியாவிலிருந்து மாங்குளம் ஒட்டுசுட்டான் ஊடாக பேருந்து சேவையை ஏற்படுத்தக் கோரிக்கை

(அக்கராயன்)

வவுனியாவில் இருந்து மாங்குளம் ஒட்டுசுட்டான் வழியாக இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்தினை சேவையில் ஈடுபடுத்துமாறு பொது மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. துணுக்காயில் இருந்தும் யாழ்ப்பாணத்தில் இருந்தும் மாங்குளம் வழியாக முல்லைத்தீவு நகரத்திற்கு பயணிக்கின்ற பேருந்துகளில் சனநெரிசல் காணப்படுவதாகவும் நீண்டநேர இடைவெளிகளில் பேருந்துகள் பயணிப்பதால் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுகளில் மாணவர்களும் உத்தியோகத்தர்களும் சிரமங்களை எதிர் கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

எனவே குறிப்பாக காலை 5.00 மணியளவில் வவுனியாவில் இருந்து இலங்கை போக்குவரத்துசபையின் பேருந்துகளை மாங்குளம் வழியாக முல்லைத்தீவிற்கு பயணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் நடைபெறுகின்ற கூட்டங்களில் குறித்த மாவட்டத்தின் கிராமங்கள் பலபோக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளார்கள் எனவும் பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்துமாறு பணித்தாலும் பேருந்து சேவைகள் இடம் பெறுவதில்லை என்ற குற்றச்சாட்டுகள் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன. (9-350)



பரந்தன் சனசமூக நிலையப் புதிய கட்டட திறப்பு விழா கடந்த வாரம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தின் அதிபர் செ.அம்பிகைபாகன், கண்டாவளை உதவிதிட்டமிடல் பணிப்பாளர் பூ.ராஜ்வினோத் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் செயலாளர் அ.சசிகுமார் உட்பட பலர் கலந்துகொண்டனர்.




# இறுதிச்சடங்கில் துப்பாக்கிச்சூடு இருவர் பரிதாபமாக உயிரிழப்பு!



(வோஷிங்டன்) புளோரிடாவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் சிறுவன் ஒருவன் உட்பட இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்றும் இரண்டு பேர் காயமடைந்தனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற இறுதிச் சடங்கு நிகழ்வொன்றில் இந்தத் துப்பாக்கிச்சூட்டு சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தின்போது 15 வயது சிறுவன் உட்பட இருவர் உயிரிழந்ததாகவும் ஒரு பெண்ணும் ஒரு இளைஞனும் காயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# ஈராக்கில் புதிய பிரதமர் நியமனம்


(பக்தாத்) ஈராக்கின் ஜனாதிபதி பர்ஹாம் சாலிஹ் நாட்டின் புதிய பிரதமராக முகமது அல்லாவியை நியமித்தார்.



அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையில் ஏற்பட்ட சிக்கல்களையடுத்து அங்கு அரசாங்கத்தை எதிர்த்து தொடர்ச்சியாக வன்முறைகளும் ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்று வருகின்றன. இந்நிலையில், முன்னாள் பிரதமர் அடெல் அப்துல் மஹ்தி நவம்பர் மாதம் பதவி விலகினார்.

இதனையடுத்து சுமார் இரண்டு மாதங்களின் பின் புதிய பிரதமர் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தங்கச்சுரங்கத்தில் நிலச்சரிவு 16 பேர் பரிதாபமாக உயிரிழப்பு



(அஸ்மரா) எரித்திரியா நாட்டில் உள்ள ஒரு தங்கச்சுரங்கத்தில் நிலச்சரிவு ஏற்பட்ட விபத்தில் 16 பேர் உயிரிழந்தனர்.

எரித்திரியா வடகிழக்கு ஆபிரிக்க நாடுகளில் அமைந்துள்ள ஒரு நாடாகும். இந்த நாடு எதியோப்பியா, சூடான், ஜிபோயுடி ஆகிய நாடுகளை எல்லைகளாகக் கொண்டுள்ளது. இந்நாட்டில் தங்கத்தை வெட்டி எடுக்க பல்வேறு பகுதிகளில் சுரங்கங்கள் அமைந்துள்ளன.

இந்நிலையில், அந்நாட்டின் தென்கிழக்கு எல்லையில் உள்ள ஒரு தங்கச்சுரங்கத்தில் நேற்று முன்தினம் 34 பேர் தங்கத்தை வெட்டி எடுக்கும் வேலையை செய்து கொண்டிருந்தனர்.

அப்போது எதிர்பாராத விதமாக சுரங்கத்தில் திடீரென நிலச்சரிவு ஏற்பட்டது. இதனால் சுரங்கத்தின் மேற்பரப்பில் இருந்த மண் திடீரென சரிந்து விழுந்தது. இந்த விபத்தில் சுரங்கத்தில் வேலை செய்து கொண்டிருந்த அனைவரும் சிக்கிக்கொண்டனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த மீட்புக்குழுவினர் சுரங்கத்தில் சிக்கித்தவித்த 15 பேரை படுகாயங்களுடன் மீட்டனர். ஆனால் இந்த விபத்தில் 16 பேர் உயிரிழந்ததாகவும் 3 பேரின் நிலைமை என்னவென்று தெரியவில்லை எனவும் மீட்புக்குழுவினர் தெரிவித்தனர். (ஐ-2)

# நியூசிலாந்தின் முன்னாள் பிரதமர் காலமானார்!

(வெலிங்டன்) நியூசிலாந்தின் முன்னாள் பிரதமரும் உலக வர்த்தக நிறுவனத்தின் முன்னாள் தலைவருமான மைக் மோர் தனது 71 ஆவது வயதில் காலமானார்.

அவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஆக்லாந்தில் உள்ள தனது வீட்டில் இயற்கை எய்தினார்என்று அவரது மனைவி யிவோன் தெரிவித்தார்.

உலக வர்த்தக நிறுவனத்தின் தலைவராக அவர், 1999 ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டு வரை பணியாற்றினார்.

நியூசிலாந்தில் ஒரு நீண்ட அரசியல் வாழ்க்கையை மைக் மோர் கொண்டிருந்தாலும் 1990 ஆம் ஆண்டில் 59 நாட்களுக்கு மட்டுமே பிரதமராக இருந்ததுடன் அதன் பின்னர் நடந்த பொதுத் தேர்தலுக்குப் பின், அவர் எதிர்க் கட்சியின் தலைவராக மூன்று ஆண்டுகளுக்குப் பணியாற்றினார்.

இதனையடுத்து அமெரிக்காவின் நியூசிலாந்தின் தூதுவராக ஐந்து ஆண்டுகள் பணியாற்றிய அவர் 2015 ஆம் ஆண்டில் பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டார்.

இந்நிலையில் அவரது மறைவு தொடர்பாக இரங்கல் தெரிவித்துள்ள பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்ன், "தனது வாழ்க்கையை நாட்டுக்கு சேவை செய்வதற்காக அர்ப்பணித்த ஒரு பெரிய புத்திசாலியையும் பெரும் மனிதனையும் உலகம் இன்று இழந்துள்ளது" எனத் தெரிவித்தார். (ஐ)

# உலகையே அச்சுறுத் 305 பேர் பலி;14 ஆ

(பீஜிங்)

**உலகினையே அச்சுறுத்தும் கொரோனா வைரஸ் தாக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தற்போது 305 ஆக அதிகரித்துள்ளது.**

2,590 பேர் புதிதாக, இந்த வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்கள் என இனம் காணப்பட்டுள்ள நிலையில் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்தை தொட்டுள்ளது.

சீனாவில் கொரோனா வைரஸ் பரவலை அடுத்து உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 305ஐ எட்டியது என நாட்டின் தேசிய சுகாதார ஆணைக்குழு மேற்கோள் காட்டி அந்நாட்டு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டது.

இந்த வைரஸ் பரவலையடுத்து, பிற நாடுகள் சீனாவின் மீது பயணத் தடைகளை விதித்துள்ளதுடன் விமான நிறுவனங்கள் விமான சேவைகளையும் முடக்கின. மேலும் பல நாடுகள் சீனாவில் உள்ள தமது நாட்டவர்களை வெளியேற்றும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டன. சுமார் 16 நாடுகளில் இந்த வைரஸ் தொற்று தொடர்பாக 130 இற்கும் மேற்பட்டவர்களை அடையாளம் கண்டுகொண்டதுடன் அவற்றில் எதுவுமே இதுவரை

# அறுவைச்சிகிச்சைக்கு இதய ஹெலிகொப்டர் விபத்து

(டோக்கியோ) ஜப்பானில் இதயத்தைக் கொண்டு சென்ற ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளானதில் ஏழு பேர் படுகாயமடைந்தனர்.

இதய மாற்று அறுவை சிகிச்சைக்காக இதயத்தை கொண்டு சென்ற ஹெலிகொப்டரே நேற்று முன்தினம் சனிக்கிழமை இவ்வாறு விபத்துக்குள்ளானது.

ஈசுவகமட்சு நகரில் உள்ள புகுஷிமா வைத்தியசாலையிலிருந்து மாகாண விமான நிலையத்திற்கு செல்லும் வழியிலேயே, கோரியமா நகரில் ஒரு நெல் வயலில் விழுந்து குறித்த ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளானது.

# கொரோனாவிற்கான தடுப்பு அலிபாபா நிறுவனம் 250

(பீஜிங்) கொரோனா வைரஸிற்கான தடுப்பு மருந்தை கண்டுபிடிக்க 250 கோடி ரூபாய் நிதியை, அலிபாபா நிறுவனத்தின் நிறுவநர் ஜக்-மா சீன அரசுக்கு வழங்கினார்.

இதில் சுமார் 100 கோடி ரூபாய், தடுப்பு மருந்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் இறங்கியுள்ள இரண்டு அரச ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மிகுதித் தொகை நோய்த் தடுப்பு மற்றும் சிகிச்சைகளுக்காகப் பயன்படுத்தப்படும் என அமெரிக்க நாளேடொன்று செய்தி வெளியிட்டது.

சீனாவில் வுஹான் நகரில் இருந்து பரவிய கொரோனா வைரஸ் உலக நாடுகள் பலவற்றுக்கும் பரவி வருவதால் உலக சுகாதார அமைப்பு சுகாதார நெருக்கடி நிலையைப் பிரகடனம் செய்தது.

சீனாவில் இதுவரை 300 இற்கும் மேற்பட்டோர் இந்த வைரஸால் உயிரிழந்துள்ள அதேவேளை, வுஹான் நகரில் ஒரு கோடிக்

# கொரோனா கணனி

## பொறியியலாளர்கள் தகவல்

(பீஜிங்) கொரோனா வைரஸ் மனிதர்களை மட்டுமல்லாது கணினிகளையும் தாக்கும் என பொறியியலாளர்கள் தகவல் வெளியிட்டனர்.

மனித உயிர்களைக் காவு கொண்டிருக்கும் சீனாவின் கொரோனா வைரஸ் பீதி உலகம் முழுவதும் பரவியுள்ளது. அந்த வைரஸ் பரவக்கூடாது என்பதில் ஏனைய நாடுகள் தீவிர முன்னெச்சரிக்கையை எடுத்து வருகின்றன.

இந்நிலையில் கொரோனா வைரஸ் கணனியையும் தாக்கும். இது தொடர்பாக கஸ்பெர்ஸ்கை அன்ரிவைரஸ் நிறுவனத்தைச் சேர்ந்த தொழில்நுட்பவியலாளர்கள்



# வெளிநாடு



## றுத்தும் கொரோனா!
## ஆயிரம் பேர் பாதிப்பு

ா
ன்
ு.
ஒன்று
ற நாடு
களை
ங்கள்
கின.
ா தமது
பாடுக
ல் இந்த
இற்கும்
டுகொ
வரை



ஆபத்தானவை அல்ல என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் அவர்களில் பெரும்பாலானோர் அண்மையில் ஹுபேயில் இருந்து வருகை தந்தவர்கள் எனவும் சுட்டிக்காட்டியது. (ஐ)

## இதயத்தை கொண்டு சென்ற
## த்து - ஏழு பேர் படுகாயம்

வாறு
ஷிமா
விமான
லயே.
விழு
க்குள்

இதில், மூன்று பொலிஸ் அதிகாரிகள், இரண்டு தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் இரண்டு மருத்துவ ஊழியர்கள் இருந்தனர்.

மருத்துவ ஊழியர்களில் ஒருவர் பலத்த காயமடைந்துள்ளதாகவும் ஆனால் அது உயிராபத்தான காயங்கள் இல்லை எனவும் மருத்துவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும் விபத்து எவ்வாறு நிகழ்ந்தது என்பது குறித்து, இதுவரை எவ்வித தகவலும் வெளியிடப்படாத நிலையில், இவ்விபத்து குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-2)

## டுப்பு மருந்தை கண்டுபிடிக்க
## 50 கோடி ரூபாய் நிதியுதவி

ப்பு மற்
ப்படும்
செய்தி
ந்து பர
டுகள்
க சுகா
நிலை
ம் மேற்
ந்துள்ள
கோடிக்



கும் மேலானோர் கிட்டத்தட்ட வெளியே வரமுடியாத நிலையில் முடக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், வைத்தியசாலைகளில் நீண்ட வரிசையில் மக்கள் காத்திருப்பதாக சீனாவிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் சீனாவின் பெரும் பணக்காரரான ஜக்-மா, தனது தொண்டு நிறுவனத்தின் ஊடாக சீன அரசுக்கு நிதியுதவி அளித்துள்ளார். (ஐ-2)

## னியையும் தாக்குமாம்

### ல்

ழவதும்
கூடாது
ன்னெச்
வரஸ்
டர்பாக
வனத்
ளர்கள்

கணனிகளில் உள்ள கோப்புக்களில் தீங்கிழைக்கும் கொரோனா வைரஸை கண்டுபிடித்தனர். இது PDF, MP4 மற்றும் Document கோப்புக்களை தாக்கியிருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

இது குறித்து தொழில்நுட்பவியலாளர்கள் தெரிவிக்கையில், தற்போது கொரோனா வைரஸ் பற்றி பரவலாகப் பேசப்பட்டு வருகிறது.

ஆனால் இந்த வைரஸை ஏற்கனவே சைபர் கிரிமினல்கள் பயன்படுத்தினர்.

இதுவரை நாங்கள் 10 வைரஸ் கோப்புக்களைப் பார்த்துள்ளோம்.

இந்த கொரோனா வைரஸ் கோப்புக்கள் வளரும் தன்மை கொண்டதாக இருக்கலாம் என்று கருதுகிறோம்.

கொரோனா வைரஸ் போலியான கோப்புக்கள் மூலம் மறைந்து பரவும்" என மேலும் தெரிவித்தனர். (ஐ)

## சிரியப் படைகள் தாக்குதல்
### 21 பேர் உயிரிழப்பு

(டமாஸ்கஸ்)

கடந்த சில நாட்களாக ரஷ்ய விமானப் படையின் ஆதரவுடன் சிரியப் படைகள் மேற்கொண்ட தாக்குதல்களில் 21 பொதுமக்கள் உயிரிழந்தனர்.

வடக்கு சிரியாவில் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள இட்லிப் நகரில் மேற்கொள்ளப்பட்டு வரும் வான்வழித் தாக்குதல்களில் இலட்சக்கணக்கான மக்களை துருக்கி எல்லைக்கு தப்பி ஓட கட்டாயப்படுத்துகிறது.



இந்தச் சந்தர்ப்பத்திலேயே கடந்த நாட்களில் ரஷ்ய விமானப் படையின் ஆதரவுடன் சிரியப் படைகள் மேற்கொண்ட தாக்குதல்களில் 21 பொதுமக்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். (ஐ-2)

### ஒபாமா நிர்வாகத்தின் தடை நீக்கம்
## உலகின் எந்தப்பகுதியிலும் அமெ.படையினர் நிலக்கண்ணிவெடிகளைப் பயன்படுத்தலாம்
### ஜனாதிபதி ட்ரம்ப் அறிவிப்பு

(வோஷிங்டன்)


அமெரிக்கப் படையினர் கண்ணிவெடிகளைப் பயன்படுத்துவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நீக்கினார்.

முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமாவின் நிர்வாகம் விதித்திருந்த தடையையே ட்ரம்ப் நீக்கியுள்ளார்.

ஒபாமா நிர்வாகத்தின் கொள்கை காரணமாக அமெரிக்கப் படையினர் மீது விதிக்கப்பட்ட கண்ணிவெடி பயன்பாட்டு தடையால் எதிரிகளுடனான மோதல்களின் போது அமெரிக்கப் படையினருக்கு பாதகமான நிலையே ஏற்படுகின்றது எனப் பாதுகாப்புத் திணைக்களம் சுட்டிக்காட்டியது.

கண்ணிவெடி பயன்பாட்டு தடை காரணமாக எமது படையினருக்கு ஆபத்து ஏற்படுவதை அனுமதிக்க ஜனாதிபதி தயாரில்லை எனவும் பாதுகாப்பு திணைக்களம் சுட்டிக்காட்டியது.





ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முன்னரை விட வலுவானதாக அமெரிக்க இராணுவத்தை மாற்றி வருகின்றார் எனவும் தெரிவித்தது.

2014 இல் ஒபாமா நிர்வாகம் கொரிய வளைகுடா தவிர உலகின் ஏனைய பகுதிகளில் அமெரிக்கப் படையினர் நிலக்கண்ணிவெடிகளைப் பயன்படுத்துவதற்குத் தடை விதித்தது.

தென்கொரியாவை பாதுகாப்பதற்காக தயாரிக்கப்பட்ட நிலக்கண்ணிவெடிகளை அழிக்குமாறு உத்தரவிட்ட ஒபாமா நிர்வாகம் நிலக்கண்ணிவெடிகளை உற்பத்தி செய்வதில் அமெரிக்கா ஏனைய நாடுகளுடன் இணைந்து செயற்படாது எனவும் அறிவித்தது.

விதிவிலக்கான சூழ்நிலைகளில் அமெரிக்க படையினர் உலகின் எந்தப் பகுதியிலும் நிலக்கண்ணிவெடிகளை பயன்படுத்தலாம் என ட்ரம்ப் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

## ஆஸியில் மீண்டும் காட்டுத்தீ
## அவசரநிலைப் பிரகடனம்

(கன்பெரா)

அவுஸ்திரேலியாவில் ஏற்பட்டுள்ள காட்டுத்தீயின் காரணமாக தலைநகர் கன்பெராவில் அவசரநிலைப் பிரகடனம் செய்யப்பட்டது.

அவுஸ்திரேலியாவில் தெற்கு அவுஸ்திரேலியா, நியூசவுத்வேல்ஸ், விக்டோரியா கடற்கரையையொட்டிய பகுதிகளில் காட்டுத்தீ தொடர்ந்து பரவியது. விக்டோரியா மாகாணத்தில் தீ பரவி வருகின்ற பகுதிகளில் வசிக்கின்ற சுமார் ஒரு இலட்சம் பேர், வீடுகளை விட்டு வெளியேறும்படி ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டிருந்தனர்.

சிட்னி மற்றும் மெல்பேர்ன் நகரங்களுக்கு இடையே உள்ள சிறிய நகரமான கன்பெராவில் சுமார் 4 இலட்சம் பேர் வசிக்கின்றனர். கன்பெராவில் கடந்த 20 ஆண்டுகளில் இல்லாத மாபெரும் காட்டுத்தீ ஏற்பட்டது. கன்பெராவின் தென்பகுதியில் 18,500 ஹெக்டேயருக்கு அதிகமான பரப்பளவில் காட்டுத்தீ எரிந்துகொண்டிருக்கிறது.

தற்போது பொதுமக்கள் வசிக்கும் பகுதிக்கு அருகில் நெருங்கியுள்ளது.

இந்நிலையில் தலைநகரான கன்பெராவில் அவசரநிலைப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. அங்கு நிலவும் வரண்ட வானிலை, அதீத வெப்பம் மற்றும் காற்றின் வேகம் காரணமாக தீ கட்டுக்கடங்காமல் பரவி வருவதால், கன்பெரா மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் வசிக்கும் மக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ஐ-2)

# போதைப்பொருள் வர்த்தகத்துடன் அரசியல்வாதிகளுக்குத் தொடர்பு

## இராஜாங்க அமைச்சர் விதுர குற்றச்சாட்டு

(களுத்துறை)

போதைப் பொருள் வர்த்தகத்துடன் இலங்கையின் அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் மற்றும் சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகளுக்குத் தொடர்பு இருப்பதாக இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க குற்றம் சாட்டினார்.

இதனால் முழு நாட்டில் உள்ள பிள்ளைகளும் பாதுகாப்பற்ற நிலைமையில் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். களுத்துறையில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



" பண்டாரகம பிரதேசத்தில் சுமார் 200 கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருள் மாத்திரமல்ல, ஆயுதங்களும் பிடிபட்டன. இந்தப் போதைப் பொருள் எங்கு செல்கிறது?. யார் இதனைக் கடத்தி வருகின்றனர்?. உங்கள் பிள்ளைகள் இதற்கு அடிமையாகி இருக்கலாம். உங்கள் பிள்ளைகள் போதைப் பொருளை பயன்படுத்துகின்றனரா இல்லையா என்பது உங்களுக்கு தெரியுமா?.

பாடசாலைகளுக்கு எதிராக எந்தளவுக்கு இப்படியான வியாபாரத்தை செய்கின்றனர். எமது பிள்ளைகள் எவரும் பாதுகாப்பாக இல்லை என்பதை நான் பொறுப்புடன் கூறுகின்றேன். இவற்றின் வேரை தேடினால் அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள், சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகளுக்கு தொடர்புள்ளது. அப்படியென்றால் இதனை யாரிடம் சொல்வது?. மக்களின் வாழ்க்கையை அழிக்கவும் சமூகத்தை அதலபாதாளத்திற்கு தள்ளவும் பல வேலைகள் நாட்டில் நடக்கின்றன எனவும் விதுர விக்ரமநாயக்க மேலும் சுட்டிக்காட்டினார். (ஐ)

# பொதுத் தேர்தலுக்கு முன்னர் ஐ.தே.க வில் குடும்பச் சண்டை!

## இராஜாங்க அமைச்சர் விமலவீர சுட்டிக்காட்டு



(அம்பாறை)

பொதுத் தேர்தலுக்கு முன்னர் ஐ.தே.கட்சியில் குடும்பச்சண்டை தொடங்கிவிட்டது. ஆனால் பொதுத் தேர்தலில் வெற்றி பெறுவோம் என அவர்கள் தெரிவிப்பது கேலிக்கையானது என வன ஜீவராசிகள் இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் மாவடிப்பள்ளியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம் பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது தேர்தல் காலம் ஆரம்பித்துள்ள நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியில் தலைமைத்துவப் போட்டி அதிகரித்துள்ளது. அந்தக் கட்சியில் தலைவர் தான் முழு அதிகாரம் படைத்தவர். ஆனால் கட்சியில் ஜனநாயகம் இல்லை.

பெயருக்கு மட்டுமே ஜனநாயகம் உள்ளது. இந்தக் கட்சியில் தலைவர் மாத்திரமே தான் தோன்றித்தனமாக முடிவுகளை எடுக்கின்றார். இதனால் எமக்கு தேர்தலில் வெற்றி பெறுவது இலகுவாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## தமிழ்த் தலைமைகள் முன்னெடுத்துள்ள

# எதிர்ப்பு அரசியலால் எதனையும் சாதிக்க முடியாது

## வியாழேந்திரன் எம்.பி.விளக்கம்



(ஏறாவூர்)

எதிர்ப்பு அரசியலால் சாத்தியமான விடயங்களைக்கூட சாதிக்க முடியாத துர்ப்பாக்கிய நிலையை கடந்த 72 வருடங்களாக தமிழ் மக்கள் எதிர்கொண்டு வந்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் 'நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சமான நோக்கு' எனும் எண்ணக் கருவிற்கமைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவால் முன்னெடுக்கப்படும் கிராமத்திற்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம் என்ற திட்டத்தின் கீழ் புதிய வீட்டுக்கு அடிக்கல் நாட்டும் விழா நேற்று முன்தினம் (சனிக்கிழமை) மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது தமிழ்த் தலைமைகள் முன்னெடுத்துள்ள எதிர்ப்பு அரசியலால் எதனையும் சாதிக்க முடியாது என்றும் எதிர்காலச் சந்ததியையும் கையேந்தும் நிலைக்கே அது இட்டுச்செல்லும் எனவும் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நான்கரை வருடத்தில் செய்யாததை தான் 60 நாட்களுக்குள் செய்துமுடித்துள்ளதாகவும் வியாழேந்திரன் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## இராசி பலன்

ஒருவர் வேகமாக வந்தார். அவசரமாக ஒரு "நியூஸ் பேப்பர்" வாங்கினார். அதை விட அவசரமாக அங்கேயே நின்று கொண்டு புரட்டினார். ஒரு நிமிடம் எதையோ ஆர்வமாகப் பார்த் தார். அதன் பின் நிதானமாக பேப்பரை மடித்து வைத்துக் கொண்டு அவசரமில்லாமல் நடந்து போனார். அவரிடம் மெதுவாகச் சென்று 'அப்படி என்னத்தை சேர் அவ்வளவு ஆர்வமாகப் பார்த்தீர்கள்.' என்று கேட்டேன். 'கடையிலே பேப்பர் வாங்கினவுடனே முதல் காரியமாக அதைப் பார்த்துவிடுவேன் சேர்.' என்றார். 'எதை?' என்று கேட்டேன்.

"அது தான் சேர்... ராசி பலன்...! அதைப் பார்த்தால்தான் எனக்கு எல்லாம் சரியாக ஓடும் "என்றார். "அது சரி சேர்... ராசி பலனில் என்ன போட்டிருக்கிறதோ அது பிரகாரம் அன்றைக்குச் சரியாக நடக்கிறதா? "என்று கேட்டேன்.

"நடக்கிறதா இல்லையா என்று எல்லாம் சரி பார்த்துக் கொண்டிருக்கமாட்டேன் சேர்.. காலையிலே அதைப் பார்க்க வேண்டும்.. அதிலே ஒரு ஆவல்.. அவ்வளவு தான்'' என்றார். கிட்டத்தட்ட எல்லோருமே இதே மாதிரி ஒரு ஆர்வத்திலே தான் அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ராசி பலன் பார்க்கிற பழக்கம் தமிழர்களிடம் ரொம்ப அதிகமாக இருக்கிறது என்கிறார் ஒரு பேராசிரியர். அவர் எழுதியிருந்த ஆய்வுக் கட்டுரை ஒன்று சமீபத்திலே படித்தேன்.

ராசி பலன் போடாமல் வருகிற நாளிதழ்கள் இங்கே ரொம்ப குறைவு. அது போட்டாத்தான் அதிகமாக விற்பனையாகிறது. அதனாலே நம்பிக்கை இல்லாதவர்கள் கூடப் போட்டிருக்கிறார்கள்.

ரொம்ப வேடிக்கை சேர் சென்னையில் பேப்பர் வாங்கி தன்னோட ராசி பலன் பார்த்து விட்டு பெங்களூரிலே ஓடுகிற குதிரை மேலே பணம் கட்டுகிறவர்களும் உண்டு. ராசி பலன் பாா்த்துவிட்டு லாட்டரிசீட்டு வாங்குகிறவர்களும் உண்டு.

இந்தியாவிலே அச்சாகின்ற மொத்த லாட்டரி சீட்டிலே 70 சதவீதம் தமிழ் நாட்டிலே தான் விற்பனையாகு தாம் சேர்.

வான் மண்டலம் பூ மண்டலத்தைப் பாதிக்கிறது உண்மை தான். அதை அறிவியல் பூர்வமாகச் சிந்திக்க வேண்டும். அதை விட்டுவிட்டு இன்று நண்பரால் பணவரவு என்று ராசிபலன் பார்த்துக் கொண்டிருக்கிறோம். நம்முடைய நண்பர் இன்றைக்கு பணம் கொண்டு வந்து கொடுக்கப் போகிறான் என்பது ஆகாயத்திலே உள்ள நட்சத்திரத்திற்கு எப்பொழுது சேர் தெரியும்.

அதுவுமில்லாமல்... இங்கே உள்ள நண்பர்கள் எந்தக் காலத்திலே சேர் பணம் கொண்டுவந்து கொடுத்திருக்கிறார்கள். நண்பர்களைப் பக்கத்திலே இருக்கிற எங்களாலேயே புரிந்து கொள்ள முடியவில்லை... எங்கேயோ இருக்கிற நட்சத்திரத்திற்கு என்ன தெரியுமா?

ஒரு காலத்திலே.. நாங்கள் வாழ்கின்ற இந்தப் பூமி ஒரே இடத்தில் நிலையாக இருந்திருக்க வேண்டும் என்றும் சூரியனும் சந்திரனும் பூமியை சுற்றி வருகிறது என்றும் நம்பிக் கொண்டிருந்தோம். அந்தக் காலத்திலே உருவான ராசி பலன் கொள்கையை சூரியனைச் சுற்றித்தான் பூமி வருகிறது என்று தெரிந்து கொண்ட இந்தக் காலத்திலேயும் நம்பிக் கொண்டிருப்பது ரொம்ப விநோதம் தான். இந்த ராசி பலன் பார்க்கிற பழக்கம் நம்முடைய ஊக்கத்தை இழக்கச் செய்யக் கூடிய ஒரு பழக்கம். அது வேண்டாம் விட்டுவிடுங்கள்.

இப்பொழுது ஒரு உதாரணத்துக்கு நாமே ஒரு சோதனை செய்து பார்ப்போமே! ஒரே நாள் வந்த தினசரி பேப்பர்கள் சிலவற்றை எடுத்துக் கொள்வோம். அதிலே ஒரே ராசிக்கு ஒவ்வொரு பேப்பரிலும் என்ன பலன் வந்திருக்கின்றது பார்க்கலாமா? என்னுடைய நண்பர் ஒருவர் ராசிக்கு ஒவ்வொரு செய்தித் தாளிலேயும் என்ன ராசி பலன் என்று பார்த்தோம்.


ஒரு பேப்பரிலே செலவும் சிரமும் என்று போட்டிருக்கிறது. இன்னொரு பேப்பரிலே சுலபமான நன்மை என்று போட்டிருக்கிறது. இதிலே எதை சேர் நம்புவது? நீங்களும் ஒரு நாள் இதைச் சோதித்துப் பாருங்கள்... அதுக்கப்புறம் இந்தப் பழக்கத்தை விட்டுவிடுவீர்கள்.


என்னுடைய நண்பர் ஒருவரும் நானும் ஒரு நாள் கடையிலே பேப்பர் வாங்கினோம். நண்பர் ராசி பலனிலேயெல்லாம் நம்பிக்கை இல்லாதவர். இருந்தாலும் நான் பேப்பர் வாங்கியவுடனே உங்க ராசி என்ன சொல்லுங்கள். பலன் என்னவென்று பார்க்கலாம்" என்றேன்.


அவர் சிரித்துக் கொண்டே "அதெல்லாம் புதினமுங்க. அதை ஏன் பார்க்கிறீர்கள் ". "சும்மா சொல்லுங்கள் " என்றேன். "என் ராசி தனுசு.. அதிலே" பணவரவு " என்று போட்டிருக்காம்! "என்றார். நான் பார்த்தேன். ஆச்சரியப்பட்டுப் போனேன். பணவரவு என்று தான் போட்டிருக்கிறது. "அது எப்படி சேர்... பார்க்காமலே கரெக்டா சொன்னீர்கள்!'' என்று கேட்டேன். அவர் மெதுவாக அருகில் வந்து காதோட காதாக... "அந்தப் பேப்பருக்குத் தினமும் ராசி பலன் எழுதிக்கொடுக்கிறதே நான் தானே! "என்றார்.

# யாழில் முதன் முதலில் உருளைக்கிழங்கு பயிர்களில் படைப்புழுவின் தாக்கம்!

## செய்கையாளர்களே அவதானம்







படைப்புழுத் தாக்கமானது 2018 ஆம் ஆண்டில் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டது. இது பிரதானமாக சோளப் பயிர்களைப் பாதிக்கும் அந்நிய ஆக்கிரமிப்புப் பீடையாகும். இப்படைப் புழுவானது 80 இற்கும் அதிகமான பயிர்களைப் பாதிக்கும். யாழ்.மாவட்டத்தில் சோளப் பயிர்களில் 2018/2019 கால போகத்தில் அடையாளம் காணப்பட்டதுடன் பாரியளவில் சேதம் ஏற்படுத்தப்பட்டது.

விவசாயத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு விரிவாக்க நடவடிக்கை மூலம் இத்தாக்கம் கட்டுப்படுத்தப்பட்டது.

இக்காலபோகத்தில் படைப்புழுத்தாக்கமானது சோளப்பயிரைத் தொடர்ந்து உருளைக்கிழங்கு பயிரையும் சேதப்படுத்துவது அச்சுவேலிப் பிரதேசத்தில் தற்போது அவதானிக்கப்பட்டுள்ளது. உருளைக்கிழங்கில் படைப்புழுத்தாக்கம் ஆபிரிக்க நாடுகளில் மட்டுமே தாக்கம் ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

### உருளைக்கிழங்கு பயிரில் படைப்புழுத் தாக்கத்தை அடையாளம் காணல்

- உருளைக்கிழங்குப்பயிரின் இளம் பயிர்களை இப்பீடை முதலில் தாக்கும். பயிரின் வளர் முனைகள் படைப்புழுவால் வெட்டி உண்ணப்படும் தொடர்ந்து நிலமட்டத்திலிருக்கும் தண்டு மற்றும் கிழங்கு என்பன இதனால் சேதப்படுத்தப்படும்.
- இப்பீடையின் தாக்கத்தின் போது இலைகள் சேதப்படுத்தப்பட்டு தண்டின் உட்பகுதிகள் சேதப்படுத்தப்படுவதால் தாவரம் வாடிய தோற்றத்துடன் காணப்படும். ஆனால் தண்டுப்பகுதியில் அழுகல் தன்மை காணப்படமாட்டாது.
- பாதிக்கப்பட்ட தாவரத்தின் நிலத்தின் கீழ் காணப்படும் தண்டுப்பகுதி வெட்டப்பட்டது போன்று காணப்படும்.
- கிழங்கு உருவாகும் காலத்தில் பீடைத்தாக்கம் ஏற்படின் தண்டைத்தாக்கும் பீடை கிழங்கிலும் சேதத்தை ஏற்படுத்தும்.

### படைப்புழுவினை அடையாளம் காணல்

- தாவர இலைகளின் பின்புறத்தில் வெண்ணிற அல்லது நரைநிற முட்டைக்குவியல் வெண்ணிற இழைகளால் மூடி காணப்படும்
- இளம் குடம்பிகள் மென் பச்சை நிறமானதோடு முதிர்ச்சியடைந்த குடம்பிகள் பச்சை மஞ்சள் அல்லது கபில நிறமானவையாகும்.
- தலை கடும் கபில நிறமானதோடு தலையில் தலை கீழ் Y போன்ற வடிவம் காணப்படும். உடலின் ஒவ்வொரு துண்டத்திலும் 4 புள்ளிகள் காணப்படுவதுடன் இறுதித்துண்டத்திற்கு முன்னுள்ள துண்டத்தில் இப்புள்ளிகள் நான்கு மூலைகளில் சதுரவடிவில் அமைந்திருக்கும்.
- முதிர்ந்த குடம்பிகள் 3-4 செ.மீ நீளமானவையாகும்.
- காற்றின் உதவியுடன் நிறையுடலிகள் ஒரு நாளில் 100 கி.மீ தூரம் பறக்கக்கூடிய ஆற்றலைக்கொண்டவை.

### கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

- இலைகளில் காணப்படும் முட்டைகள், சேதப்படுத்தப்பட்ட பயிர் மீதிகளை எரித்து அழித்தல்.
- நைதரசன் பசளைப்பாவனையைக் குறைத்தல்
- தோட்டத்தைச் சுத்தமாக வைத்திருத்தல்
- தோட்டத்திற்கண்மையில் காணப்படும் சோளம் உட்பட விருந்து வழங்கித் தாவரங்களில் தாக்கத்தை அவதானித்து அவற்றை அழித்தல்.
- பயிர் அறுவடையின் பின்பு மண்ணை ஆழமாக உழுவதன் மூலம் கூட்டுப்புழுவை அழித்தல்.
- பயிர்ச்செய்கை ஆரம்பத்தின்முன் சேதனப்பசளையிடல்.
- 1/4 ஏக்கரிற்கு 2 பெரோமோன் பொறிகளை பாவிப்பதன் மூலம் ஆண் அந்துப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த முடியும்
- புழுக்கள் அவதானிக்கப்படும் இடங்களுக்கு வேப்பம் விதைச் சாற்றினை விசிறல் (10 லீற்றர் நீருக்கு 300-500 கிராம் விதைகள் + 30 கிராம் சவர்க்காரம்)

**இப்பீடைத்தாக்கம் தீவிரமாக காணப்படின் கீழே தரப்பட்டுள்ள சிபார்சு செய்யப்பட்ட பூச்சி நாசினிகளில் ஒன்றை பயன்படுத்தவும்**

| இரசாயனபெயர் | வர்த்தகப் பெயர் | 10 லீற்றர் நீரில் கலக்க வேண்டிய அளவு |
|---|---|---|
| குளோரேன்ரவில்புறோல்20% தயோமெத்தேக்சாம் 20% | வேட்டக்கோ | 3 gram |
| ஸ்பினோசட் 25g/l SC | சக்சஸ் | 10ml |
| ஸ்பிதொடரம் 25% EG | ரேடியன்ற் | 3gram |
| க்லோரென்டரனிலிபோரோல் 200g/l SC | கொரெஜன் | 3ml |
| எபமக்ரினடபென்சோயேற் 5% l SC | புறோக்லேம் | 4gram |

**ச.பாலகிருஷ்ணன்**
**பாட விதான உத்தியோகத்தர் ( பயிர் பாதுகாப்பு)**
**பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்.**



யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணியகத்தால் நடத்தப்பட்ட "கழிவுப்பொருட்களிலிருந்து புத்தாக்கம் படைத்தல்" போட்டியில் வலயமட்டம், மாவட்ட மட்டம், மாகாண மட்டம் ஆகிய மூன்று நிலைகளிலும் யா/கெருடாவில் இ.த.க.பாடசாலை மாணவர் அணி முதலாம் இடம் பெற்றது.

# மதத்தை இழிவுபடுத்தும் சுவரோவியங்களுக்கு அனுமதி வழங்கக்கூடாது

(சாவகச்சேரி)

மதங்களை இழிவுபடுத்தும் வகையில் வரையப்படுகின்ற சுவரோவியங்கள் தவிர்க்கப்பட வேண்டும் என சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர்கள் சிலர் வலியுறுத்தியுள்ளனர். அண்மையில் சாவகச்சேரி பிரதேச சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே முன்னணி மற்றும் ஈ.பி.டி.பி. உறுப் பினர்கள் சிலர் இவ்விடயத்தை சபையில் வலியுறுத்தியிருந்தனர். இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

கொடிகாமம் நகரப் பகுதியில் வரையப்பட்ட சுவரோவியம் ஒன்று இந்து மதத்தை இழிவுபடுத்துவதாக அமைந்துள்ளது. குறித்த சுவரோவியத்திற்கு இனந்தெரியாத சிலர் கழிவு ஒயில் வீசி சேதப்படுத்திய போதிலும் மீண்டும் அதே சுவரோவியம் அதே இடத்தில் வரையப்பட்டுள்ளது. இது மதங்களுக்கு இடையே குரோதத்தை ஏற்படுத்தும் செயற்பாடாகவே பார்க்கப்படுகிறது. எனவே இவ்வாறான சுவரோவியங்களை வரைய பிரதேசசபை அனுமதி அளிக்கக்கூடாது என அவர்கள் மேலும் தெரிவித்தனர். உறுப்பினர்களின் கருத்திற்கு தவிசாளர் பதிலளிக்கையில்,

இது ஜனாதிபதியின் உத்தரவிற்கு அமைவாக நாடளாவிய ரீதியாக இடம்பெற்று வருகின்ற செயற்றிட்டம். இதற்கு பிரதேச சபை அனுமதி அளிக்கவோ அனுமதி மறுக்கவோ முடியாது. குறித்த விடயம் நல்ல விடயமாக இருந்தால் அதற்கு யாரும் தடையில்லை எனத் தெரிவித்தார்.

குழந்தை ஒன்று பசியில் அழுகின்ற வேளையில் ஒரு சிலர் அதைப் பொருட்படுத்தாமல் பாம்புப் புற்றுக்கு பால் ஊற்றுகின்றனர். குழந்தையின் பசியை உணர்ந்த பாம்பு தானும் அந்த பால் அபிஷேகத்தை ஏற்க மறுக்கிறது என்ற வகையில் கொடிகாமத்தில் வரையப்பட்ட சுவரோவியம் ஒன்று கழிவு ஒயில் வீசி சேதமாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

# துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் ஆணின் சடலம் காட்டில் கண்டெடுப்பு

(ஏறாவூர்)

மட்டக்களப்பு புனானை - ஓமனியாமடு காட்டுப்பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் ஆணின் சடலம் கண்டெடுக்கப்பட்டதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் கடந்த 25ஆம் திகதி வீட்டை விட்டு வெளியேறிய நிலையில் நேற்று அதிகாலை இவ்வாறு சடலமாகக் கண்டெடுக்கப்பட்டார். அத்தோடு, இவரது சடலத்துக்கு அருகில் சொட்கண் துப்பாக்கியொன்றும் மீட்கப்பட்டது. இந்நிலையில், குறித்த நபர் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்துகொண்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர்.

ஓமனியாமடு பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய மயில்வாகனம் பிரசாந்தன் என்பவரே இவ்வாறு சடலமாகக் கண்டெடுக்கப்பட்டார். (இ-7)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

இணுவில் இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று 3 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் வி.சிவஞானம் தலைமையில் இடம்பெறும். இதில் பிரதம விருந்தினராக தொழிலதிபர் ந.திவாகரன் கலந்து கொள்வார். (இ-5)


(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று 3 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அதிபர் அருட் சகோதரி மரியா ஜீவந்தி தலைமையில் இடம்பெறும். இதில் பிரதம விருந்தினராக சமூக வலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளர் பி.செந்தில்நந்தனன் கலந்து கொள்வார். (இ-5-17)

## ஐ.தே.க.தலைமையிலான

# கூட்டணியின் முக்கிய பொறுப்பில் ரவியை நியமிக்க ரணில் முயற்சி!





(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி தலைமையிலான புதிய கூட்டணியின் தலைவராக சஜித் பிரேமதாஸ அடுத்தவாரம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படுவார் எனத் தெரியவருகிறது. எனினும் கூட்டணியின் சின்னம் தொடர்பில் இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

ஐ.தே.கவின் செயற்குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி புதிய கூட்டணியில் சஜித் பிரேமதாஸவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் குறித்து கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடிதம் மூலம் சஜித்திற்கு அறிவித்துள்ளார்.

புதிய கூட்டணியின் செயலாளராக ரவி கருணாநாயக்கவை நியமிக்க ரணில் தரப்பு விரும்பியபோதும் சஜித் அதற்கு உறுதியான மறுப்பைத் தெரிவித்து விட்டார். இதையடுத்து ரவி கருணாநாயக்கவிற்கு கூட்டணியின் முக்கிய பொறுப்பொன்று வழங்கப்பட வேண்டுமென ரணில் வலியுறுத்திக்கேட்டுள்ளார். புதிய கூட்டணியின் செயலாளராக ரஞ்சித் மத்தும பண்டாரவை நியமிக்க சஜித் தீர்மானித்துள்ளார்.

இதேவேளை அண்மையில் ஐ.தே.க.செயற்குழுவிலிருந்து நீக்கப்பட்ட அஜித் பீ. பெரேரா, சரத் பொன்சேகா, இம்தியாஸ் பகீர் மார்க்கர் மற்றும் ரோஸி சேனநாயக்க ஆகியோரை மீண்டும் செயற்குழுவில் இணைக்க ரணில் இணங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. புதிய கூட்டணியின் சின்னம் குறித்த முடிவு பெப்ரவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் எடுக்கப்படும் என்று சஜித் தரப்பினர் தெரிவித்தனர்.(இ-7)

# லொறியில் தீக்காயத்துடன் சடலம்

## பொலிஸார் தீவிர விசாரணை



(தம்பலகாமம்)

திருகோணமலை - தம்பலகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாலம்போட்டாறு பகுதியில் லொறி தீ பற்றிய நிலையில் மீட்கப்பட்ட சடலம் தொடர்பில் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் திருகோணமலை - மிகிந்த புரம் பகுதியைச் சேர்ந்த கந்தசாமி யோகநாதன் (வயது47) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலநறுவை-ஹிங்குராங்கொட பகுதியிலிருந்து திருகோணமலை நோக்கிச் சென்று கொண்டிருந்த லொறியின் சாரதிக்கு தூக்க கலக்கம் ஏற்பட்டமையால் நேற்று முன்தினம் அதிகாலை பாலம் போட்டாறு பகுதியில் லொறியை நிறுத்திவிட்டு தூங்கியதாகவும் இதன்போது தீப் பற்றிய நிலையில் லொறியின் சாரதி உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு திருகோணமலை பொது வைத்தியசாலையின் சட்ட வைத்திய நிபுணர் றுசிர நதீர சென்று பார்வையிட்டதுடன் சடலத்துக்கு அருகில் சால்வையொன்றும் அந்தச் சடலத்தின் வாயில் மண்ணெண் ணெய் துர்நாற்றம் வீசுவதாகவும் சால்வையை இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் சட்ட வைத்திய நிபுணர் தெரிவித்தார்.

இதேவேளை உயிரிழந்த சாரதியின் சடலத்தை சீ. டி. ஸ்கான் மூலம் பரிசோதனை செய்ததாகவும் அதனுடைய அறிக்கைகள் பெறப்பட்டுள்ளதர்கவும் இன்று திங்கட்கிழமை பிரேத பரிசோதனைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் சட்ட வைத்திய நிபுணர் றுசிர நதீர தெரிவித்தார்.

அத்துடன் உயிரிழந்த சாரதியுடன் உதவியாளர் வந்ததாகவும் அந்த உதவியாளர் தொடர்பில் எந்தவிதத் தகவலும் இல்லை எனவும் சாரதியுடன் உதவியாளர் வந்தாரா? என்பது பற்றி விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# மலக்கழிவுகளை அகற்ற உரிய இடமில்லை

## பரு.நகரசபைத் தவிசாளர் கவலை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நகர சபை மலக் கழிவுகள் மற்றும் கழிவு நீரை உரியமுறையில் அகற்றுவதற்கு ஏற்ற இடம் ஒன்றைப் பெற்றுத் தருமாறு பருத்தித்துறை நகர சபைத் தவிசாளர் இருதயராஜா கோரிக்கை முன்வைத்தார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் கடந்த 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கோரிக்கையை முன் வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமது நகரசபைக்குட்பட்ட பகுதிகளிகன் கழிவுகளை சுத்திகரிப்புச் செய்து கரவெட்டிப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதியிலேயே அகற்றினோம்.

இந்நிலையில் குறித்த பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் தமது நகரசபைக் கழிவுகளைக் கொட்ட வேண்டாம் என அப்பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த கரவெட்டிப் பிரதேச சபைத் தவிசாளர் ஒரு கிழமைக்குள் 3000 லீற்றருக்கு மேற்பட்ட கழிவுகள் பருத்தித்துறை நகர சபையால் எமது எல்லைக்குட்பட்ட பகுதியில் அகற்றப்பட்டு வருகிறது.

இந்நிலையில் பொலிஸ் நிலையங்கள், இராணுவ முகாம்கள் மற்றும் வேறு அரச நிறுவனங்களின் கழிவுகளும் எமது பிரதேச சபை எல்லைக்குள் அகற்றப்பட்டு வருகின்றன.

இதனால் நிலத்தடி நீர் மாசடையும் எனப் பொதுமக்கள் அச்சமடைவதால் எதிர்க்கிறார்கள் எனச் சுட்டிக்காட்டினார். (ஜ-10)

# ஆட்டோ - லொறி மோதல்

## ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

கொழும்பு - கண்டி வீதியின் பேலியகொடை துட்டகெமுனு மாவத்தை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

பின்னால் வந்த ஆட்டோ லொறியுடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.

இச்சம்பவத்தில் ஆட்டோவில் பயணித்த இரண்டு பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவ்விபத்து தொடர்பாக லொறியின் சாரதியை பொலிஸார் கைது செய்தனர். சம்பவம் தொடர்பில் பேலியகொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ)



# பொதுத் தேர்தலில் பெரும்பான்மையுடன் வென்றால் அடிப்படைவாதிகள் இல்லாத அரசாங்கம் அமையும்

## கெஹலிய திட்டவட்டம்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பெரும்பான்மைப் பலத்துடன் தனியான அரசாங்கத்தை அமைக்க முடிந்தால், அடிப்படைவாதிகள் இல்லாத மக்களின் ஆட்சியை மக்களுக்கு பெற்றுக்கொடுக்க முடியும் என இராஜாங்க அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் எமது தரப்புக்கு ஆட்சி அதிகாரத்தை வழங்கினால், அடுத்த 100 ஆண்டுகளுக்கு அடிப்படைவாதத்திற்கு இடம் இருக்காது. அத்துடன் தற்போதைய அரசாங்கம் மேற்கொள்ளும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான விளம்பரங்கள் செய்யப்பட மாட்டாது.

22 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் வேலைத்திட்டத்தை தற்போது ஆரம்பித்துள்ளோம். ஆனால் ஒரு விளம்பரமும் செய்யப்படவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆத்ம கௌரவம்பூச்சிய நிலைக்கு சென்றுள்ளது.

மற்றவர்களிடம் கையேந்தாத, அடிப்படைவாதிகளிடம் அடிபணியாத அரசாங்கத்தை அமைக்க வேண்டும். அதற்காக எமக்கு உதவுங்கள் எனவும் இராஜாங்க அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மேலும் தெரிவித்தார்.(ஜ)



யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் அதிபர் அ.பீ.திருமகன் அடிகளார் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவர்களாகிய பேன் கோல்டிங்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் அலெக்ஸிஸ் இந்திரஜித் லவல், சிறப்பு விருந்தினராக வடமாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் (அபிவிருத்தி) பி.இ.ஜி. சுரேந்திரன், அயற்பாடசாலை அதிபர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகம், பருத்தித்துறை கலாசார அதிகாரசபை என்பன இணைந்து நடத்திய பண்பாட்டுப் பெருவிழா அண்மையில் பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை ஸ்ரீ தலைமையில் நடைபெற்றது. (படங்கள்:- மகாலிங்கம்)

# விமானக் கொள்வனவு நிதிமோசடி தொடர்பில்

# முழுமையான விசாரணைக்கு ஜனாதிபதி உத்தரவு



(கொழும்பு)

**விமானங்களைக் கொள்வனவு செய்வதற்காக ஸ்ரீலங்கன் விமான சேவைக்கும் மற்றும் ஏர்பஸ் நிறுவனத்திற்கும் இடையில் இடம்பெற்ற பரிவர்த்தனையின் போது ஏற்பட்டதாகக் கூறப்படும் நிதி மோசடி தொடர்பில் முழுமையான விசாரணை ஒன்றை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு உத்தரவிடடார்.**

தேசிய விமான சேவை, விமானங்களை உற்பத்தி செய்யும் ஏர்பஸ் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத்துடன் மேற்கொண்ட பரிவர்த்தனையின் போது சிலரால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் நிதி மோசடி தொடர்பிலான தகவல்கள் அடங்கிய அறிக்கை நேற்று ஆங்கிலப் பத்திரிகை ஒன்றிலும் மற்றும் நேற்று முன்தினம் இணையத்தளம் ஒன்றிலும் வெளியிடப்பட்டிருந்தது.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் ஒவ்வொரு அம்சத்தையும் உள்ளடக்கிய வகையில் உடனடியாக முழுமையான விசாரணை ஒன்றை மேற்கொண்டு அதன் முடிவை தனக்கு அறிவிக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டார். (இ-7)

# சீனாவுடன் இலங்கை நெருக்கமான உறவு மாணவர்களை அழைத்துவர உதவியது

## அமைச்சர் பவித்ரா அனைவருக்கும் நன்றி



(கொழும்பு)

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் சீன அரசாங்கத்துடன் நெருக்கமான உறவை கொண்டுள்ளதன் பயனாகவே வுஹான் நகரிலிருந்து 32 மாணவர்களை நாட்டுக்கு அழைத்துவர முடிந்துள்ளதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ள வுஹான் நகரில் அகப்பட்டிருந்த 32 இலங்கை மாணவர்களும் நேற்றுமுன்தினம் காலை மத்தள விமான நிலையம் ஊடாக நாட்டை வந்தடைந்தனர்.

மிகவும் சவாலாக திட்டத்தை நிறைவேற்றி வெற்றிகரமாக மாணவர்களை நாட்டுக்கு அழைத்து வந்த விமானப்படை மற்றும் இராணுவத்தினருக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் சுகாதார அமைச்சில் நேற்று விசேட ஊடகச் சந்திப்பு ஒன்று இடம் பெற்றது.

இந்த ஊடகச் சந்திப்பில் தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அமைச்சர் பவித்ரா.

கொரோனா வைரஸ் இலங்கைக்குள் பரவுவதை கட்டுப்படுத்த ஜனாதிபதி உள்ளிட்ட அனைவரும் ஒரு குழுவாக இணைந்து செயற்படுவதால் இந்தச் சவாலை வெற்றிகொள்ள முடிந்தது.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் சீன அரசாங்கத்துடன் நெருக்கமான உறவை கொண்டுள்ளதன் பயனாகவே வுஹான் நகருக்குள் பிரவேசித்து எமது மாணவர்களை அழைத்து வர முடிந்தது.

ஸ்ரீலங்கன் விமான சேவையின் 16 ஊழியர்கள் அடங்கிய அந்த நிர்வாகத்திற்கும் விமானப்படை மற்றும் இராணுவத்தினருக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

தாய் நாட்டுக்காக இந்த கடமையை நிறைவேற்றிய அனைவருக்கும் எனது நன்றி என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கோட்டாவும், சஜித்தும் நேரடித் தீர்மானங்கள் எடுக்கக்கூடியவர்கள்

## ஹேசா விதானகே சுட்டிக்காட்டு



(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேரடியான தீர்மானங்களை எடுக்கும் நபர் எனவும் அவர் அண்மையில் அப்படியான சில தீர்மானங்களை எடுத்ததாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேசா விதானகே தெரிவித்தார்.

சஜித் பிரேமதாஸவும் அப்படியான நேரடியான தீர்மானங்களை எடுக்கும் நபர் என்பதால் அடுத்த பொதுத் தேர்தலில் பின்னர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு பொருத்தமான வகையில் சஜித் பிரேமதாஸவின் கீழ் அரசாங்கம் ஒன்றை அமைக்க முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி பெரும்பான்மைப் பலத்துடன் கூடிய அரசாங்கத்தை அமைக்க முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு எந்தவகையிலும் 113 பெரும்பான்மைப் பலத்தை பெற முடியாத நிலைமை ஏற்பட்டதாகவும் ஹேசா விதானகே தெரிவித்தார். (ஐ)

# 909 ஆண்டுகளின் பின் அரிய திகதி

(கொழும்பு)

இந்த நூற்றாண்டின் 02.02.2020 ஆம் திகதி மிகவும் அரிய நிகழ்வுகளில் ஒன்றாக அமைந்துள்ளது.

இதுபோன்ற அரிய சம்பவம், சுமார் 909 ஆண்டுகளுக்கு முன் 11.11.1111 என்ற திகதியில் அமைந்துள்ளது. அதேபோன்று அடுத்த 101 ஆண்டுகளுக்குப் பிறகு 12.12. 2121 என்ற திகதி அமையவிருக்கிறது. 2 ஆம் திகதியாக அமைந்துள்ள நிலையில், அடுத்த அரிய திகதி 3 ஆம் எண் இடம்பெறும் விதமாக 03.03. 3030 என்ற திகதியில் அமையவுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதனை ஆங்கிலத்தில் பேலின்ட்ரோம் என்று வகைப்படுத்துகின்றனர். அதாவது ஒரு எழுத்து, எண் உள்ளிட்டவற்றின் தொடரில் ஒரு சொல்லாகவோ, சொற்றொடராகவோ அல்லது எண்களின் குவியலாகவோ முதல் மற்றும் கடைசி வரிசை முதல் மேலிருந்து கீழாகவும், கீழிருந்து மேலாகவும் ஒரேமாதிரியாக இடம்பெறுவதாகும் தமிழில் 'விகடகவி' என்ற சொல் இதற்கு சிறந்த உதாரணமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# புதிய வரலாற்றை உருவாக்கவுள்ள மகிந்த - மைத்திரி

(கொழும்பு)

அடுத்து நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தல் இலங்கைக்கு ஒரு வரலாற்றுத் தேர்தலாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. குறிப்பாக முன்னாள் ஜனாதிபதிகள் இருவர் இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் சுதந்திரக்கட்சி இணைந்து உருவாகும் ஒரே கூட்டணியின் கீழ் போட்டியிட முடிவு செய்துள்ளனர்.






அதன்படி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொலநறுவை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தியும் மகிந்த ராஜபக்ஷ குருநாகலை பிரதிநிதித்துவப்படுத்தியும் போட்டியிடத் தீர்மானித்துள்ளனர்.

ஒரே அரசியல் கூட்டணியில் இருந்து இரண்டு முன்னாள் ஜனாதிபதிகள், பொதுத் தேர்தலில் போட்டியிடுவது என்பது இதுவே முதன்முறை.

இதேவேளை எதிர்வரும் மார்ச் மாதம் நாடாளுமன்றத்தை கலைப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு கிடைக்கவுள்ளது. எனவே மார்ச் மாத நடுப்பகுதிக்குள் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தலுக்கான அழைப்பு விடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏப்ரல் மாதமளவில் பொதுத் தேர்தல் இடம்பெறும் எனவும் குறிப்பாக ஏப்ரல் 21 தாக்குதல் இடம்பெற்று ஒருவருடம் நிறைவு பெறவுள்ளமையால் அதனை முன்வைத்தே பிரசார பணிகள் இடம்பெறும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-7)







இந்து பௌத்த கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் இரண்டாம் மொழி கற்கை நெறியை நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு யாழ். நீராவியடிப் பகுதியிலுள்ள இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்னதேரர், வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன், அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் பிரத்தியேக செயலாளர் டேவிற், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் மற்றும் உயரதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.




**ரமணன்**


செலவழிக்க சில்லறை கூட இல்லாத போதுதான் தெரியும்...



வீணாக செலவழித்த பணத்தின் அருமை...

**கமலகண்ணன்**


விளக்கிற்கு வெளிச்சம் மட்டும் தான் கொடுக்கத் தெரியும்.




தேவை எங்கு என்பதை நாம் தான் தீர்மானிக்க வேண்டும்

**ராசாத்தி**

நரிகளுக்கு மத்தியில் வாழும் போது சில சமயம் கர்ஜனை செய்துதான் சிங்கமென நிரூபிக்க வேண்டியுள்ளது.



**சுமித்திரா**



ஆசையை குறைப்பதே மன அமைதிக்கான மருந்து

**ரேதுஷன்**




**அனித்தா**

நம் துன்பத்திற்கு பாதி காரணம் நம் கற்பனைகளே...



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## மகிந்த அரசைப் பலப்படுத்துங்கள்

# த.தே.கூ., ஐ.தே.கவின் போலிப்பிரசாரங்களை நம்பி தமிழ் மக்கள் இனியும் ஏமாறக் கூடாது!

## ஆளுநர் திஸ்ஸ யாழில் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் லங்கா சமசமாஜக் கட்சி வடக்கிலும் வேட்பாளர்களை களமிறக்கவுள்ளதாக தெரிவித்த அக்கட்சியின் பொதுச் செயலாளரும் வட மத்திய மாகாண ஆளுநருமான திஸ்ஸ விதாரண, வடக்கில் வாழும் தமிழ் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் போலிப் பிரசாரங்களை நம்பி இனியும் ஏமாறாது தமக்கு வாக்களித்து மகிந்த தலைமையிலான 'அரசைப் பலப்படுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. அவர் ஒரு ஆட்கடத்தல்காரர், கொலைகாரன் என சித்திரித்தனர். இந்த போலியான பிரசாரங்களை ஐக்கிய தேசியக் கட்சியே பிரதானமாக செய்தது. இது தொடர்பில் பொய்யான கருத்துக்களை வெளியிட்ட அரசியல் பிரமுகர் ஒருவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.


ஆனாலும் கோட்டாபய ராஜபக்ஷ தேர்தலில் வெற்றியீட்டியதன் ஊடாக இவர்கள் கூறியது அனைத்தும் பொய்கள் என நிரூபணமானது. இந்த நாட்டில் 1946 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி இந்திய மக்களின் குடியுரிமையை பறிக்க சட்ட மூலத்தை முன்வைத்திருந்தது. அதற்கு எதிராக அன்றைக்கே லங்கா சமசமாஜ கட்சி எதிர்ப்பு தெரிவித்திருந்தது. அந்த சட்டத்துக்கு ஆதரவாக ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஜி.ஜி. பொன்னம்பலம் ஆதரவு வழங்கினார். 1948 ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தன சிங்கள மொழியை அரச கரும மொழியாக கொண்டு வர முயன்றார். அதற்கும் நாம் எதிர்ப்பு தெரிவித்திருந்தோம்.

இவ்வாறு நாம் பல சந்தர்ப்பங்களில் இனவாத செயற்பாடுகளுக்கு எதிராகச் செயற்பட்டிருந்தோம். கடந்த ஆட்சியில் நாட்டின் பொருளாதாரம் மிக மோசமாக வீழ்ச்சியடைந்திருந்தது. அதற்குக் காரணம் ஐக்கிய தேசியக் கட்சி புதிய முதலாளித்துவ கொள்கையை கடைப்பிடித்ததால் வரிகள் மக்கள் மீது சுமத்தப்பட்டன. இதனால் நாட்டில் செல்வந்தர்களுக்கும் வறிய ஏழை அப்பாவி மக்களுக்கும் ஒரே அளவான வரி அறவிடப்பட்டது. இதனால் ஏழைகள் இன்னும் ஏழையாகி கடனாளிகள் ஆக்கப்பட்டனர்.

நாட்டின் பொருளாதாரம் தொடர்பாக திட்டமிடலுடன் செயற்படவில்லை. மாறாக நாட்டின் வளங்கள் வெளிநாடுகளுக்கு விற்கப்பட்டன. ஆனால் ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய வெற்றியடைந்தமையால் நாட்டுக்கு பாதகமான சோபா ஒப்பந்தம் இல்லாமல் செய்யப்பட்டது. நாட்டின் ஜனாதிபதியாக சஜித் வந்திருந்தால் நாட்டின் பெரும் பகுதிகள் வெளிநாடுகளுக்கு விற்கப்பட்டிருக்கும். அதிர்ஷ்டவசமாக கோட்டாபய ஜனாதிபதியாகியமையால் நாட்டின் வளங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

நாட்டை முதலில் அபிவிருத்தி செய்ய வேண்டும். மக்களின் பொருளாதாரம் முன்னேற வேண்டும். அதன் ஊடாக நாட்டிலுள்ள அனைவரும் சமமாக மதிக்கப்படுவார்கள். அப்போது நாட்டில் உள்ள பிரச்சினைக்கான தீர்வுகள் கிடைக்கும். எனவே தற்போது அபிவிருத்தியே முக்கியமாகவுள்ளது. அந்த வகையில் நாட்டில் ஒரு இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படவுள்ளன. இந்த திட்டம் கிராம உத்தியோகதத்தர் ஊடாக சமுர்த்தி பெறும் குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இதில் எவ்வித அரசியல் தலையீடுகளும் இருக்காது. இதே போல வேலையற்ற பட்டதாரிகளுக்கும் வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த நாட்டில் இனங்களுக்கு இடையில் பாரிய மோதல்களை ஐக்கிய தேசியக் கட்சியே ஏற்படுத்தி வருகின்றது. கடந்த காலங்களில் கறுப்பு ஜூலை கலவரம் போன்ற பல மோதல்களை ஐ.தே.கவே ஏற்படுத்தியது. இதிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சி தப்பிக்க முடியாது. ஆனால் தமிழ் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் சூழ்ச்சிகளை அறியாது அவர்களுக்கு வாக்களிக்கின்றனர். தமிழ்க் கட்சிகள் கோட்டாபயவுக்கு எதிராக கருத்துக்களை முன்வைப்பது அரசியல் உள்நோக்கம் கருதியே.



எதிர்வரும் பொதுத் தேர்தலில் லங்கா சமசமாஜ கட்சி வடக்கிலும் வேட்பாளர்களை களமிறக்கவுள்ளது. ஆகவே இங்கு வாழும் தமிழ் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் போலிப் பிரசாரங்களை நம்பி ஏமாறாது எமக்கு வாக்களித்து மகிந்த தலைமையிலான அரசை பலப்படுத்த அணி திரளுங்கள் என மேலும் அழைப்பு விடுத்தார். (இ-7)

## செயற்பட்டு மகிழ்வோம்

(யாழ்ப்பாணம்)

யா/கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயத்தின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு இன்று 3 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் க. தேவநேசன் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் கணக்காளர் திருமதி.சிவமதி நந்தகுமார் கலந்து கொள்வார். (இ-5)

## கொரோனா போன்று டெங்கிலும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்

(கொழும்பு)

உலகை அச்சுறுத்தும் கொரோனா வைரஸ் தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்தப்படுகின்றது.

இருப்பினும் டெங்கு நுளம்பு ஒழிப்பு தொடர்பான நடவடிக்கைகளில் குறைவு ஏற்படாத வகையில் பொது மக்கள் கூடுதலான கவனம் செலுத்த வேண்டும் என்று பொது மக்களுக்கு சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் அருண ஜெயசேகர இதனைத் தெரிவித்தார்.

டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை டிசெம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் ஜனவரி மாதத்தில் குறைவடைந்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 80 | 110 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 110 | 140 |
| பச்சைமிளகாய் | 250 | 260 | 250 | 400 |
| தக்காளி | 350 | 450 | 370 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 120 | 100 |
| கோவா | 150 | 140 | 150 | 160 |
| கரட் | 300 | 350 | 400 | 520 |
| பூசணி | 120 | 100 | 120 | 160 |
| புடோல் | 140 | 160 | 140 | 160 |
| வாழைக்காய் | 80 | 90 | 80 | 160 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 300-500 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 120 | 120 | 120 |
| பாகற்காய் | 200 | 160 | 100 | 300 |
| வெண்டிக்காய் | 130 | 200 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 80 | 100 |
| பயற்றங்காய் | 150 | 240 | 250 | 240 |
| லீக்ஸ் | 300 | 360 | 270 | 400 |
| பீற்றூட் | 200 | 140 | 340 | 200 |
| கறிமிளகாய் | 350 | 300 | 280 | 280 |
| முருங்கைக்காய் | 700 | — | 800 | 1000 |
| போஞ்சி | 250 | 200 | 200 | 300 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | — | 100 |
| கீரை - 1பிடி | 50 | 40 | 30-50 | 40 |
| தேசிக்காய் | 40 | 30 | 50 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 30-70 | 40-70 |
| இராசவள்ளி | 250 | 150 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 150 | 180 | 250 | 300 |
| முள்ளங்கி | 60 | 120 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 70 | 30 | 40 |
| ஈரப்பலா | 100 | — | — | 120 |

## 8 தமிழக மீனவர்களையும் 12ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைக்க நீதிமன்று உத்தரவு

(கொழும்பு)

இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டார்கள் என நேற்று முன்தினம் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட எட்டு இந்திய மீனவர்களை திருகோணமலை நீதிமன்ற பதில் நீதிபதி எதிர்வரும் 12 ஆம் திகதிவரை தடுப்புக் காவலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.



தமிழ்நாடு, இராமநாதபுரம் மற்றும் காயல்பட்டினம் பிரதேசங்களைச் சேர்ந்த எட்டு மீனவர்கள் முல்லைத்தீவு மாவட்டம் சாலை கடற்பகுதியில் நேற்று அதிகாலை அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும்போது கைது செய்யப்பட்டனர் என கடற்படையினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட தமிழ்நாட்டு மீனவர்களையும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு தமிழ் நாட்டு மீனவர்களை கடல் வள மற்றும் நீரியல் திணைக்கள அதிகாரிகள் வசம் ஒப்படைத்தனர்.

ஒப்படைக்கப்பட்ட தமிழ்நாடு மீனவர்களை திருகோணமலை பதில் நீதிபதி அன்ஃபரின் இல்லத்திற்கு அழைத்துச்செல்லப்பட்ட நிலையிலேயே குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (இ-7)

# பொது அறிவுத் தகவல்கள்

- உலகிலேயே மிக ஆழமான ஏரி எது?
  **பைக்கால் ஏரி**

- உலகிலேயே மிக நீளமான குகை எது?
  **மாமத் குகை**

- உலகில் உள்ள ஒரே ஒரு இந்து மத நாடு எது?
  **நேபாளம்**

- உலகின் மிகப் பெரிய ஸ்டேடியம் செக்கோஸ்லோவியாவிலுள்ள ஸ்டிராகு ஸ்டேடியம் தான்.


- உலகின் மிகப் பெரிய ரயில்வே சந்திப்பு அமெரிக்காவின் நியூயோர்க்கிலுள்ள கிராண்ட் சென்ட்ரல் டெர்மினஸ் தான்.

- உலகின் மிகப் பெரிய விமான நிலையம் ரியாத்திலுள்ள காலித் மன்னர் பன்னாட்டு விமான நிலையம் தான்.


- உலகின் மிகப் பெரிய கடல்துறைமுகம் அமெரிக்காவின் நியூயோர்க் மற்றும் நியூஜெர்ஸி துறைமுகம் தான்.

- உலகின் மிகப் பெரிய ரயில்வே பிளாட்பாரம் சுவீடன் நாட்டிலுள்ள ஸ்டார்விக் பிளாட்பாரம் தான்.

# வழிகாட்டுங்கள்



# வித்தியாசம் கண்டுபிடியுங்கள்





# பழமொழிகள்

- விளக்குமாற்றுக்கு பட்டுக்குஞ்சமா?
- விளையாட்டாய் இருந்தது வினையாய் முடிந்தது.
- விளையும் பயிரை முளையிலே தெரியும்.
- விரலுக்குத் தக்கதே வீக்கம்.




# நம்மால் முடியும்



ஒரு நிறுவனத்தின் தலைவருக்கு தன் நிறுவனத்தில் சில தவறுகளால் 50 கோடிகள் நட்டம் ஏற்பட்டுவிட்டது. மிகவும் சோர்ந்து போய் அருகில் இருந்த பூங்காவிற்கு சென்று அங்கிருந்த சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்தார்.

அப்போது சற்று பெரிய மனிதர் போல தோற்றம் உடைய ஒருவர் இவருக்கு அருகில் வந்து அமர்ந்தார். இவர் சோகமாக அமர்ந்திருப்பதை கண்டு "ஏன் சோகமாக இருக்கிறீர்கள்" என்று கேட்டார்.

அதற்கு இவர் "எனது தொழில் நஷ்டம் அடைந்து விட்டேன். மிகவும் மனது உடைந்து போய் விட்டேன்" என்றார்.

"எவ்வளவு ரூபாய் நட்டம்?" என்றார் அவர்.

"50 கோடி ரூபாய்" என்றார் இவர்.

"அப்படியா, நான் யார் தெரியுமா?" என்று கேட்டு அந்த ஊரின் பிரபல செல்வந்தரின் பெயரை சொன்னார்.

அசந்து போனார் இவர்...

"சரி 50 கோடி பணம் இருந்தால் நீ சரியாகி விடுவாயா?" என்று கேட்டார் அவர்.

உடனே முகமலர்ச்சியுடன் இவர் "ஆமாம் எல்லாம் சரியாகி விடும்" என்றார்.

பின் அந்த செல்வந்தர் ஒரு செக் புத்தகத்தை எடுத்து கையெழுத்திட்டு இவரிடம் நீட்டி "இந்தா இதில் 500 கோடிக்கு செக், நீ கேட்டதைவிட 10 மடங்கு அதிகமாக கொடுத்திருக்கிறேன். எல்லாவற்றையும் சமாளி. ஆனால் ஒருவருடம் கழித்து இந்த பணத்தை எனக்கு திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். அடுத்த வருடம் இதே நாளில் இங்கே நான் காத்திருப்பேன்" என்று சொல்லி விட்டு செக்கை இவர் கைகளில் திணித்து விட்டு சென்றார் அவர்.

பின் அந்த நிறுவனத்தின் தலைவர் வேகமாக அலுவலகத்திற்கு சென்றார். தன் அறைக்குள் சென்று அந்த செக்கை தனது பீரோவில் வைத்து பத்திரமாக பூட்டினார். பின் தனது உதவியாளரை அழைத்து அனைத்து ஊழியர்களை நிர்வாக கூட்டத்திற்கு அழைத்து வர ஏற்பாடு செய்ய சொன்னார். ஊழியர்கள் அனைவரும் கூட்டத்தில் அமர்ந்திருந்தனர்.

இந்த நிறுவனத்தின் தலைவர் பேச ஆரம்பித்தார். "நண்பர்களே, நமது நிறுவனத்தில் 50 கோடி நட்டம் ஏற்பட்டுள்ளது. ஆனால் இப்போது என்னிடம் 500 கோடி ரூபாய் உள்ளது ஆனால் அந்த பணத்தை தொட மாட்டேன். இந்த நட்டம் எப்படி ஏற்பட்டது? எதனால் எதற்காக ஏற்பட்டது? என்று ஆராய்ந்து அதை களைந்து நமது நிறுவனத்தை வெற்றிகரமாக செயற்படுத்த நீங்கள் அனைவரும் ஒத்துழைப்பு கொடுங்கள்" என்று கேட்டுக் கொண்டார்.

பின்னர் வேலைகள் வேகமாக நடந்தன. தவறுகள் கண்டு பிடிக்கப்பட்டு களையப்பட்டன. மிகச் சரியாக அனைத்து ஊழியர்களையும் ஒத்துழைக்க வைத்தார். அவருடைய பேச்சு, மூச்சு, செயல், சிந்தனை, தூக்கம் அனைத்தும் அவருடைய தொழிலை பற்றியே இருந்தது.

மிக சரியா ஒரு வருடம் கழிந்தது. கணக்குகள் அலசப்பட்டன. மிக சரியா 550 கோடி ரூபாய்கள் லாபம் ஈட்டி இருந்தது இவருடைய நிறுவனம். அடுத்த நாள் விடிய காலை அந்த செல்வந்த கொடுத்த 500 கோடிக்கான செக்கை எடுத்துக் கொண்டு அந்த பூங்காவிற்கு விரைந்தார். சென்ற வருடம் அமர்ந்த அதே சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்தார்.

காலை நேரம் ஆதலால் பனி மூட்டத்துடன் காணப் பட்டது. சற்று நேரம் கழித்து தூரத்தில் அந்த செல்வந்தரும் அவருக்கு அருகில் அவரை கைகளால் பிடித்துக் கொண்டு ஒரு பெண்மணியும் வந்தது பனி மூட்டத்தின் ஊடே தெரிந்தது. சில விநாடிகள் கழித்து பார்த்தால் அந்த பெண்மணி மட்டும் வருகிறார் அந்த செல்வந்தரை காணவில்லை.

இவர் சென்று அந்த பெண்மணியிடம் "எங்கே அம்மா உங்கள் கூட வந்தவர்?" என்றார்

அதற்கு அந்த பெண்மணி பதற்றத்துடன் "உங்களுக்கு அவர் ஏதாவது தொந்தரவு கொடுத்து விட்டாரா?" என்றார்

இவர் "இல்லை அம்மா, ஏன் கேட்கிறீர்கள்?" என்றார்.

அந்த பெண்மணி "இல்லை ஐயா அவர் ஒரு பைத்தியம் அதாவது மனநிலை சரி இல்லாதவர், செக்கு தருகிறேன் என்று சொல்லி இங்கு இருப்பவர்களிடம் தனது பழைய செக்கை கிழித்து கையெழுத்திட்டு கொடுத்து விடுவார்" என்றார்.

ஒரு நிமிடம் அந்த நிறுவன தலைவருக்கு பேசமுடியவில்லை. அப்போ நம்மால் முடியும் என்று நினைத்தால் நிச்சயம் முடியும். அதுவே நம்மை காப்பாற்றி இருக்கிறது என்று நினைத்தார்.

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் எந்த ஒரு விடயமும் நம்மால் முடியும் என்று முதலில் நாம் நம்பவேண்டும். அப்போது தான் நாம் நமது வாழ்வில் முன்னேற முடியும்.

"வாழ்வில் நீ முன்னேறு - நாளை நீ வரலாறு" என்ற கூற்று நிச்சயம் ஒருநாள் உண்மையாகும்.

துன்பங்கள் அனுபவித்த காலத்தை மறந்து விடு.ஆனால் அது உனக்கு கற்பித்த பாடத்தை மறந்து விடாதே ~ யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழர் பற்றிச் சிந்திக்கும் சிங்களவர்களை நட்பாக்குங்கள்

இந்த நாடு அமைதியாக இருக்க வேண்டுமாயின் தமிழ் மக்களின் உரிமையைக் கொடுக்க வேண்டும் என்ற கொள்கையில் உறுதியாக இருக்கக்கூடிய சிங்கள மக்கள் பலர் உளர்.

எனினும் நாம் இவர்கள் பற்றிச் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

பொதுவில் இனவாதம் பேசுபவர்கள் பற்றியே நாம் அதிகம் கவனம் செலுத்துகின்றோம்.அவர்களின் இனவாதக்கருத்தோடு எங்கள் காலம் கடந்து போகிறது.

அதே நேரம் இனவாதம் பேசுகின்ற சிங்களத் தரப்புகள் தமிழ் மக்களின் உரிமையை வழங்கக் கூடாது என்பதற்காக தமது கருத்தை முன் வைக்கிறார்கள் என்று சொல்லுவதை விட, இனவாதம் ஒன்றுதான் தமது அரசியலுக்கான அடிக்கட்டுப் பசளை என்று அவர்கள் நினைத்து விடுகிறார்கள்.

இதன் காரணமாக இனவாதத்தீயை அணைய விடாமல் தொடர்ந்தும் அவர்கள் பராமரித்து வருகின்றார்கள். அவர்களின் இந்தத் திட்டம் வெற்றி பெறுவதற்கு நம் அரசியல் தரப்புகளும் ஊக்குவிப்புக் கொடுப்பவர்களாக இருப்பதைக் காண முடிகின்றது.

அதாவது பேரினவாதம் பேசுகின்றவர்களை நம் கருத்துக்களால் எதிர்ப்பதென்பது அவர்களுக்கு வாழ்வு கொடுப்பதாயே அமையும்.

எனவே பேரினவாதிகளை எதிர்க்க வேண்டியவர்கள் சிங்களமக்கள் அதாவது தமிழ் மக்களுக்கு உரிமை வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருக்கக்கூடிய சிங்களமக்களை ஒன்றுபடுத்தி அவர்கள் மூலமாக பேரினவாதிகளை எதிர்க்கும் போது பேரினவாதம் அடிபட்டுப்போவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

எனினும் நாம் அதனைச் செய்யாமல், பேரினவாதிகளை எதிர்க்கின்ற கருமத்தில் ஈடுபட்டு அவர்களின் அரசியல் **முதலீட்டிற்கு** நாம் உதவுகின்றோம்.

ஆக, இதுகாலும் நாம் கையாண்ட நடைமுறைகள் தோல்வியில் முடிந்து போவதற்கு தமிழர் நலன் சார்ந்து சிந்திக்கும் சிங்கள மக்களை எமக்கு நட்பாக்கி கொள்ளாமை காரணமாகும்.

ஆம் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை பெளத்த பிக்குகள், சிங்கள அரசியல்வாதிகள், சிங்கள மக்கள் எதிர்க்கின்றனர் எனின் ஒட்டு மொத்த பெளத்த பிக்குகளும் சிங்கள அரசியல்வாதிகளும், சிங் களமக்களும் எதிர்க்கின்றனர் என நாம் பொருள் கொண்டு விடுகிறோம்.இது மிகப் பெரிய தவறாகும்.

தமிழ்மக்களுக்கான உரிமையை வழங்குவதை எதிர்ப்பவர்கள் என்போர் ஒரு சிறு பகுதியினரே.ஏனையவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டவர்கள்.எனினும் அவர்கள் மெளனமாக இருக்கின்றார்கள்.

ஆகவே இத்தகையவர்களை ஒன்றுபடுத்தி அவர்கள் மூலமாக இனப்பிரச்சினைக்கான தீர்வை வலியுறுத்தும் போது பேரினவாதிகள் எதுவும் செய்ய முடியாமல் போய் தங்களின் நிலைப்பாட்டை மாற்றியமைக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாவர்.

இப்போது கூட ஜே.வி.பி யின் தலைவர் அனுர குமார திசாநாயக்க ஓர் உண்மையை இந்த நாட்டின் ஜனாதிபதிக்கு எடுத்துரைத்துள்ளார்.

அதாவது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கம் தொடர்ந்தும் தமிழ் மக்களை புறக்கணிக்குமாக இருந்தால் அது மீண்டும் தனிநாட்டுக்கான போராட்டத்தைத் தோற்றுவிக்கும் என்பது அனுரகுமார திசாநாயக்கவால் முன்வைக்கப்பட்ட கருத்து.

இங்கு ஒரு சிங்கள அரசியல்வாதி தமிழ் மக்களை இந்த அரசாங்கம் ஓரம்கட்டி விடு கிறது என்பதை மிகத் தெளிவாக கூறியுள்ளார்.

எனவே இத்தகையவர்களை நாம் நமக்கான நட்பாக்கிக் கொண்டால் இனவாதத்தீ மூண்டெரிவதை தடுத்து எங்களுக்கான உரிமையை வென்றெடுக்க முடியும்.

### தமிழ் மொழியில் தேசிய கீதம் புறக்கணிப்பு

# தமிழ் மக்களை இந்நாட்டின் அங்கமாக அரசாங்கம் ஏற்கவில்லை என்பதையே காட்டுகிறது

## நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

இத்தடவை நடைபெறவிருக்கும் சுதந்திர தின விழாவில் சிங்களத்தில் மாத்திரமே தேசிய கீதம் இசைக்கப்படும் என அரசாங்கம் அறிவித்திருப்பதானது, தமிழ் மக்களும் இந்த நாட்டின் அங்கம் என்றோ அவர்களின் மொழி, கலாசாரம், பூர்வீகம் என்பவற்றை ஏற்றுக் கொள்வதாகவோ இல்லை என்பதையே எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

கடந்த ஐந்து வருட காலத்தில் சிங்கள மொழியைத் தொடர்ந்து தமிழ் மொழியிலும் தேசியகீதம் இசைக்கப்பட்டு வந்தது. இந் நிலையில், சிங்களத்தில் மாத்திரமே தேசிய கீதத்தை இசைப்பதென்றும் எனினும் தேசிய கீதம் இசைக்கப்படும் சந்தர்ப்பத்தில் ஒவ்வொருவரும் அவரவர் தாய் மொழியில் பாட முடியும் எனவும் கூறப்பட்டிருப்பதானது, ஏதோ தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் சலுகையைப் போன்றே தெரிகிறது. இதன் மூலம் உண்மையான புரிந்துணர்வையும் சமாதானத்தையும் ஏற்படுத்த முடியாது என்பதை அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும்.

இவ்வாறு முன்னாள் நீதியரசரும் முன்னாள் வட மாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இலங்கையில் 72ஆவது தேசிய சுதந்திர தின கொண்டாட்டத்தின் போது சிங்கள மொழியில் மாத்திரம் தேசிய கீதம் இசைக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்திருக்கும் கூற்று தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதுவரை தேசிய கீதம் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் இசைக்கப்பட்டு வந்ததன் மூலம் தமிழ் மக்களுக்கும் உரிய அந்தஸ்து வழங்கப்பட்டதாக கருதப்பட்டது. எனினும் தற்பொழுது சிங்களத்தில் மாத்திரமே தேசிய கீதம் இசைக்கப்படும் என கூறுவதன் மூலம் சிங்கள மேலாதிக்கத்தையே அது எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

மேலும் அவரவர் தங்கள் தாய்மொழியில் அதனை பாடமுடியும் என்று கூறுவது மொழிக்கு தரப்பட்ட சலுகையாகவே எண்ணத் தோன்றுகின்றது. இதன் மூலம் குறித்த நபர் வாய்மூடி மெளனமாகவும் கூட இருக்கலாம்.

சுதந்திரம் கிடைத்தது முதல் தமிழ் மக்கள் காலாகாலமாக புறக்கணிக்கப்பட்டே வருகின்றனர். அதற்கு இதனையும் சிறந்த உதாரணமாகக் கொள்ள முடியும். இதேவேளை, இந்தியாவில் ஒரு மொழியிலேயே தேசிய கீதம் பாடப்படுவதாக சில உ'றுப்பினர்கள் கூறுகின்றனர். இந்தியாவை பொறுத்தமட்டில் வங்காள மொழியிலேயே தேசிய கீதம் இசைக்கப்படுகின்றது. வங்காள மொழி அங்கு சிறுபான்மை மொழியாகும். எனினும், பெரும்பான்மை மக்கள் பேசும் இந்தி மொழியில் தேசிய கீதம் இசைக்கப்படுவதில்லை. அதே போன்று இலங்கையிலும் சிறுபான்மையானோரால் பேசப்படும் தமிழில் மாத்திரம் தேசிய கீதத்தை பாடினால், அதனை இந்தியா போன்று பெருந்தன்மையுடன் இலங்கை வாழ் சிங்கள மக்களும் ஏற்றுக் கொண்டால், அது வரவேற்கத்தக்கதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையின் தேசிய கீதம், நாடு சுதந்திரம் பெற்ற சந்தர்ப்பத்தில் சிங்களத்திலும் தமிழிலும் ஒன்றன்பின் ஒன்றாக இசைக்கப்பட்டது. பின்னர் அது கை விடப்பட்டிருந்த நிலையில், 2015ஆம் ஆண்டு சிறுபான்மை மக்களின் ஆதரவுடன் நல்லாட்சி அரசாங்கம் பொறுப்பேற்ற சமயம் சுதந்திர தின கொண்டாட்டத்தின்போது தேசிய கீதம் தமிழிலும் இசைக்கப்பட்டது. இந்நிலையில் தற்போது புதிய அரசாங்கம் பெரும்பான்மை மக்களின் பேராதரவுடன் பதவியேற்றகையோடு தேசிய கீதத்தின் தமிழ் வடிவத்துக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ அந்தஸ்தை கைவிடும் விருப்பத்தை அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் வெளியிட்டிருந்தார். இந்நிலையில், தமிழ் மக்கள் தமது கடுமையான ஆட்சேபனையை வெளியிட்டிருந்தனர்.

தமிழில் தேசிய கீதத்தை பாடுவது அரசியலமைப்புக்கு இசைவானது என்றும் சிங்களமும் தமிழும் உத்தியோகபூர்வ மற்றும் தேசிய மொழிகள் எனவும் அரசியலமைப்பின் 18 மற்றும் 19ஆவது சரத்துகள் இதனை உறுதிப்படுத்துகின்றன என்றும் தமிழ் மக்கள் சுட்டிக் காட்டியிருந்தனர்.

இதேவேளை, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இச்சர்ச்சை தொடர்பில் ஊடகவியலாளர் மாநாடொன்றில் கருத்து வெளியிடுகையில், சிங்கள மக்களை பெரும்பான்மையினராகக் கொண்ட பகுதிகளில் இடம்பெறும் தேசிய வைபவங்களில் தேசிய கீதத்தை சிங்கள மொழியில் மாத்திரம் பயன்படுத்தலாம் எனவும் தமிழர்களை பெரும்பான்மையாக கொண்ட பகுதிகளில் சுதந்திரத்துக்கு பின்னர் நடைமுறையில் இருந்தவாறு தமிழ் பிரதேசங்களில் தமிழில் இசைக்கலாம் எனவும் கூறியிருந்தார்.

மேலும், எதிர்வரும் சுதந்திர தினக் கொண்டாட்டங்களின்போது தமிழில் தேசிய கீதம் இசைக்கப்படுமா என அவரிடம் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பிரதமர் அது தொடர்பில் பதிலளிக்கையில், அரசாங்கம் இவ்விடயம் தொடர்பாக எதுவித முடிவையும் எடுக்கவில்லை என தெரிவித்திருந்தார். இந் நிலையிலேயே சுதந்திர தினத்தின் போது சிங்கள மொழியில் மாத்திரம் தேசிய கீதம் இசைக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் மஹிந்த சமரசிங்க கூறியிருக்கின்றார். சுதந்திர தின் நிகழ்வில் தேசிய கீதத்தை சிங்கள மொழியில் பாட தீர்மானித்துள்ளமை தமிழ் மக்களை புறக்கணிக்கும் செயற் பாடாகும் என அவர் தெரிவித்துள்ளார். (ஞா)

### வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

நற்பண்பு இல்லாதவனின் அறிவு ஆபத்தானது. அறிவில்லாதவனின் நற்பண்பு பயனற்றது. -நேரு

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

# உலகமே ஒரு கலாசாலை



உலகமே ஒரு பழைய பள்ளிக்கூடம்

ஒவ்வொருவருக்கும் அன்றாட வாழ்வில் பல புதிய பாடம் சூழ்நிலைகட்கேற்ப பலாத்காரமாகப் போதிக்கும், என்றும் நலம் விரும்பும் அறிஞர் பலர் செய்யும் போதும் நல் வாழ்வில் அவர்கள் சந்தித் தாராய்ந்த சில முக்கிய நிகழ்ச்சிகளின் விளக்கமாகும் சிந்தனையைச் செயல் திறனை ஒழுங்கு செய்யும்.

இந்த உலகம் ஒரு பழைமையானதும், பெரியதுமான கலாசாலையாகும். சூழ்நிலைகளுக்கேற்றபடி உலகில் வாழும் ஒவ்வொருவருக்கும் தினந்தோறும் புதிய புதிய பாடங்கள் பலாத்காரமாகப் போதிக்கப்படுகின்றன. இந்தப் படிப்பை யாராலும் ஒதுக்கிவிட முடியாது. சமூக நலமே குறிக் கோளாகக் கொண்டு வாழும் அறிஞர்கள் அவ்வப்போது பல விதத்தில் மக்களுக்கு நற்பயன் விளைவிக்கும் சன்மார்க்கங்களையும், வாழ்க்கை அனுபவ நுட்பங்களையும் போதனை செய்து வருகிறார்கள்.

அவர்கள் வாழ்வில் சந்தித்த முக்கிய நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்து, இன்ப துன்ப விளைவறிந்து வாழ்க்கைக்கு வழிகாட்டி வருகிறார்கள். இந்தப் போதனைகள் அனைத்தும் மக்களின் சிந்தனையை உயர்த்திச் செயல் திறமையை ஊட்டி வாழ்வை ஒழுங்குபடுத்தி வளப்படுத்துவனவாம்.

# வட மாகாண மென்பந்தாட்ட அரசன் துடுப்பாட்டம் இறுதியாட்டத்தில் வவுனியா பரலோக மாதா அணி

மறைந்த சைனிங்ஸ் உறுப்பினர் சுதந்திரராஜா செல்வராணி ஞாபகார்த்தமாக சைனிங்ஸ் விளையாட்டுக் கழகம் வட மாகாண ரீதியில் நடத்தும் மென்பந்தாட்ட தொடரில் இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றது வவுனியா பரலோக மாதா அணி.

வடமாகாணத்தில் உள்ள 150 அணிகளுக்கு மேல் பங்கு பற்றிய இத்தொடரில் வடக்கின் 7 இடங்களில் இப் போட்டிகள் சிறப்பாக நடைபெற்றன.

வவுனியாவின் பலம் பொருந்திய அணிகளில் ஒன்றான பரலோகமாதா அணியானது வவுனியா மாவட்ட பிரிவில் ஒரு



அணியாக இத் தொடரில் களமிறங்கியது.

சிங்கா அணியை வீழ்த்தி 2ம் சுற்றில் லெவின் ஸ்டார் அணியை வீழ்த்தி 3ம் சுற்றில் மகாசேன் அணியையும் வீழ்த்தி வவுனியா மாவட்டத்தின் 4 அணிகளுள் ஒரு அணியாகவும் வடமாகாண ரீதியான 16 அணிகளுக்கான லீக் சுற்றுக்கு ஓர் அணியாகவும் தகுதி பெற்றது.

பிளே ஓப் சுற்றில் D பிரிவில் 2ம் இடத்தை பெற்ற வவுனியா மாவட்டத்தின் இன்னுமோர் அணியான பைஸ்டார் அணியை வீழ்த்தி Qualifier 2 போட்டியில் முல்லை மாவட்டத்தின் CTB அணியையும் வீழ்த்தி அரையிறுதி ஆட்டத்துக்கு முன்னேறியது.

அரையிறுதி ஆட்டத்தில் வவுனியாவில் பலம்வாய்ந்த அணிகளில் பலம் வாய்ந்த மற்றுமோர் அணியான அடைக்கல மாதா அணியை எதிர்கொண்டது. பரலோகமாதா அணி இறுதி நேர அதிரடி துடுப்பாட்டத்தால் இறுதி ஓவரில் வெற்றியினை பெற்று வடமாகாண ரீதியான இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (க)

**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**

# வவுனியா அடைக்கலமாதா அணிக்கு 3ஆம் இடம்

மறைந்த சைனிங்ஸ் உறுப்பினர் சுதந்திரராஜா செல்வராணி ஞாபகார்த்தமாக சைனிங்ஸ் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியில் நடத்தும் மென்பந்தாட்ட தொடரின் 3 ஆம் இடத்திற்கான போட்டியில் வென்றது வவுனியா அடைக்கல மாதா அணி.

மிக முக்கியத்துவம் வாய்ந்த அனல் பறந்த அரையிறுதி ஆட்டத்தில் பரலோகமாதா அணியை எதிர்கொண்டது அடைக் கலமாதா அணி. இறுதி நேரத்தில் பந்துவீச்சில் சிறு தடுமாற்றத்தால் இறுதி ஓவரில் வெற்றியினை இழந்தது.

தொடர்ந்து 4ம் இடத்தினை குருநகர் கார்மேல் போய்ஸ் அணி பெற வடக்கின் மென்பந்தாட்ட அரசன் தொடரில் இறுதி வரை சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய அடைக்கலமாதா அணி 3ம் இடத்தைப் பெற்று தனது பெயரினை மாகாண ரீதியில் பறைசாற்றியுள்ளது. (க)



## வண்.நாவலர் ம.வி வீதியோட்ட நிகழ்வு

யாழ்.வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தின் பாடசாலையின் வரலாற்றில் முதன் முறையாக இடம் பெறவுள்ள வீதி ஓட்டப் போட்டி இன்று திங்கட் கிழமை காலை 6 மணிக்கு நடை பெறவுள்ளது. (க)

# தாஸ்-சதன்-ரமணன் அசத்தல் தீருவில் அணி மூன்றாமிடம்


வல்வை உதயசூரியன் விளையாட்டுக் கழகம் வல்வைக்குட்பட்ட அணிகளிடையே நடத்திய உதைபந்தாட்ட தொடரின் மூன்றாமிடத்துக்கான போட்டியில் உதயசூரியன் அணி தீருவில் அணியுடன் மோதியது .முற்பாதியாட்டத்தில் உதய சூரியன் அணி 1 கோலினை போட்டு முன்னிலை பெற்றது.



இரண்டாம் பாதியில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய தீருவில் அணி தாஸ், சதன், ரமணன் ஆகியோரின் அடுத்தடுத்த கோல்கள் மூலம் 3:1 என வெற்றி பெற்று 3ம் இடத்தினை பெற்றுக்கொண்டது. (க)



முரசுமோட்டை முருகானந்தா ஆரம்ப வித்தியாலத்தின் 2020ம் ஆண்டுக்கான வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வுகள் கடந்த 31 ஆம் திகதி நடைபெற்றது. (க-315)



நானாட்டான் சிவராஜா இந்து வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டி பாடசாலை அதிபர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.குறித்த விளையாட்டு நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக மீன்பிடி நீரியல் வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கி வைத்தார். (க)

## காணாமல் ஆக்கப்பட்...

ஆலய முன்றலில் காலை 10.00 மணிக்கு மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

கிழக்கில் மட்டக்களப்பு கல்லடி பாலத்தில் பேரணி காலை ஆரம்பமாகி காந்தி பூங்காவை சென்றடைந்து அங்கு மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தால் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

பெப்ரவரி 4 ஆம் திகதி இலங்கையின் சுதந்திர தினம் தமிழ் மக்களின் கரிநாளாக பிரகடனப்படுத்தி வடக்கிலும், கிழக்கிலும் இந்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (ஞா-9)

## தமிழ்மொழி...

தமிழ் மொழியில் பாடப்படும் தேசிய கீதம் என்பது இன்னொரு வழமையான பாடல் அல்ல. அது தமிழ் பேசும் இலங்கையர்களின் இலங்கையர் அடையாளம்.

இதுதான் இன்றைய காலகட்டத்தின் தேவை. என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட எம்.பியுமான மனோ கணேசன் தனது டுவிட்டர் தளத்தின் மூலம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு பகிரங்க கோரிக்கை விடுத்துள்ளார். இந்த டுவிட்டர் செய்தி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் டுவிட்டர் தளத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஞா)

## காணாமல்...

இது குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் மேலும் தெரிவித்த அவர், காணாமல்போனோரின் உறவுகளுக்கான பதிலைப் பெற்றுக்கொடுப்பதற்கான முக்கிய பணியைச் செய்து வரும் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தினரைச் சந்தித்தேன்.

இலங்கையில் காணாமல் போனோருக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்த வேண்டும் என்றும், அதுகுறித்த விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக் கப்பட வேண்டும் என்றும், இழப் பீடுகள் வழங்கப்பட வேண்டும் என்றுமே ஐக்கிய நாடுகள் சபையும் உலக நாடுகளும் வலியுறுத்தி வருகின்றன என்றார். (ஞா)

## கைக்குண்டு...

வவுனியாவில் குடாகச்சக்கொடிய பகுதியில் நேற்று வெடிக்கும் நிலையில் கைக்குண்டு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் குடாகச்சக்கொடிய எனும் கிராமத்தில் சஜித் பிரேமதாசவால் வழங்கப்பட்ட வீட்டுத் திட்ட வேலைகள் இடம்பெற்று வருகின்றது. இந் நிலையிலையே நேற்று அப்பகுதியில் வெடிக்கும் நிலையில் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

அப்பகுதிக்கு சென்ற பொலிஸார் விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் நீதிமன்ற உத்தரவு பெறப்பட்டு அக் கைக்குண்டு செயலிழக்கப்பட்டு அப்பகுதியில் இருந்து அகற்றப்பட்டுள்ளது. (ஞா-299)













## நான்கு பிள்ளை...

அழகேந்தினி இந்திரன் (வயது-46) என்ற குடும்ப பெண்ணே உயிரிழந்துள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் வல்வெட்டித்துறை ஊறணி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சென்ற சமயம் அவர் மயங்கி விழுந்ததாக கூறப்படுகிறது. இதனையடுத்து அவரை பரிசோதித்த போது அவர் ஏற்கனவே இறந்துள்ளமை தெரியவந்தது.

ஊறணி வைத்தியசாலைக்கு சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா விசாரணைகளை மேற் கொண்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சடலத்தை பிரேத பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பருத்தித்துறை பொலிஸாருக்கு உத்தர விட்டார். (ஞா-60)

## புலிகளின் ஆவண...

திய தேடுதலின் போதே கிளிநொச்சி விவேகானந்த நகர் கிழக்கில் உள்ள வீடொன்றில் இருந்து மேற்கண்ட சான்றுப் பொருட்களுடன் அதே பகுதியை சேர்ந்த 37 வயதான சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்ட இறப்பர் முத்திரைகள் இராணுவப் புலனாய்வு அலுவலகம் வவுனியா, மனித உரிமை ஆணைக்குழு வவுனியா, மாவட்ட நீதிமன்று கிளிநொச்சி, பிரதேச செய லாளர் கரைச்சி கிளிநொச்சி, பிரதேச செயலாளர் வவுனியா ஆகியவையே மீட்கப்பட்டதாக அறிய முடிகிறது.

சந்தேகநபர் மற்றும் சான்றுப் பொருட்களையும் விசேட அதிரடிப் படையினர் நேற்று கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் பாரப்படுத்தியுள்ளனர் மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஞா-100,312)

## யாழில் கொரோ...

பாளர் வைத்தியர் சி.யமுனானந்தா கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் யாழ்.தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நோயாளி ஒருவருக்கு கொரோனா வைரஸ் தாக்கம் இருந்தது என உண்மைக்குப் புறம்பான செய்திகளை சில ஊடகங்கள் வெளியிட்டிருந்தன.

இவ்வாறான நிலையில் குறித்த நோயாளி அரபு நாடு ஒன்றில் இருந்து இலங்கைக்கு வந்த நிலையில் அவருக்கு நிமோனியாக் காய்ச்சல் காரணமாகவே தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் கொரோனா வைரஸ் தொடர்பான சிறப்பு நுண்ணுயிர் வைத்திய நிபுணர் தயார் நிலையில் உள்ள போதும் குறித்த நபருக்கு அவ்வாறான அறிகுறிகளும் இல்லாத நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட வேண்டிய தேவை ஏற்படவில்லை.

ஆகவே யாழ்.மாவட்ட மக்கள் கொரோனா வைரஸ் தொடர்பில் வீண் ஐயங்கொள்ளத் தேவையில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ஞா-10)

# 19 ஆவது திருத்தம் பற்றிய நிலைப்பாட்டை வெளியிடுங்கள்

## அரசாங்கத்திடம் ஜே.வி.பி. கோரிக்கை

(கொழும்பு)

19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் தொடர்பான நிலைப்பாட்டை அரசாங்கம் உடனடியாக வெளியிட வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

குருணாகலில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தி அமைப்பின் பொதுக் கூட்டத்தில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார். தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் பற்றி நிலைப்பாட்டை அரசாங்கம் கூற வேண்டும்.

கோட்டாபய மற்றும் மகிந்த ராஜ பக்ஷ இரண்டு பேருக்கும் அது பற்றி கூற முடியாது.

நாட்டின் அழிவான ஆட்சி நிர்வாகத்திற்கு எதிரான போராட்டம் அவசியமாகிறது.

பாராளு மன்றத்தில் தேசிய மக்கள் சக்தி அமைப்புக்கு வலுவான பலத்தை வழங்க வேண்டும் எனவும் அனுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார். (ஞா)

## தமிழர்களின் கடந்த காலத்தை...

ஆட்சி தமிழ், சிங்கள மக்களை தூரமாக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வரும் சுதந்திர தினத்தன்று தமிழில் தேசிய கீதம் பாடப்படாது என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் கூறுகையில், இன்று இனவாதக் கருத்துக்களை மட்டுமே அரசாங்கம் பரப்பி வருகின்றது. சகல மக்களும் ஒன்றாக வாழக் கூடிய சூழலை நாம் அமைத்துக் கொடுத்தோம். ஆனால் ராஜபக்ஷக்கள் ஆட்சிக்கு வந்தவுடன் மீண்டும் இனவாத அரசியலைச் செய்ய ஆரம்பித்துள்ளனர்.

இலங்கையின் சுதந்திர தினம் நாளை கொண்டாடப்படவுள்ள நிலையில் தமிழ் மொழியில் தேசியகீதம் பாடப்படக் கூடாது என அறிவித்துள்ளனர். ஆனால் எமது ஆட்சியில் அவ்வாறு எந்தவொரு தடையையும் நாம் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராகச் செய்யவில்லை.

சிங்கள மக்களும் அவ்வாறு தனித்துவமான நிலைமைகளை எதிர்பார்க்கவும் இல்லை. நாம் சிங்கள, தமிழ் மக்களை நெருக்கமாக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்தோம். ஆனால் இவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் தமிழ், சிங்கள மக்களை தூரமாக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்க வேண்டாம் என அரசாங்கம் கூறுகின்றது என்றால் அது வெறுமனே தமது வெற்றியை தக்கவைத்துக்கொள்ளவும் சிங்கள மக்களை தம்வசம் வைத்திருக்கச் செய்யும் சூழ்ச்சியாகவுமே நாம் கருதுகின்றோம் என்றும் அவர் கூறியுள்ளார். (ஞா)

## புதிதாக காணி விடுவிக்க கோருவது...

விடுவிக்குமாறு கோருகின்றனர் என யாழ் மாவட்ட இராணுவகட்டளைத் தளபதி குற்றஞ்சாட்டியுள்ளார்.

தொடர்ச்சியாக பொதுமக்களின் காணிகளை விடுவித்து, அவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்கவும், வீடுகளை அமைத்து கொடுக்கவும் இராணுவம் எப்பொழுதும் தயாராகவே உள்ளது. ஆனால் விடுவிக்கப்பட்ட காணிகளில் மீளக் குடியமர்ந்து வாழ்வதற்கு காணி உரிமையாளர்கள் அக்கறை இல்லாது காணப்படுவதாக யாழ் மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரிய தெரிவித்தார்.

நேற்றையதினம் யாழ்ப்பாணம் பலாலி கட்டளைத்தலைமையகத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட இராணுவத் தளபதியிடம் ஊடகவியலாளர்கள், எதிர் வரும் காலங்களில் காணி விடுவிப்பு தொடர்பாக ஏதாவது முன்னேற்றகரமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றனவா? என கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் இவ்வாறு பதிலளித்தார்.

இதுவரையான காலப்பகுதியில் இராணுவத்தினரால் உயர் பாதுகாப்பு வலயம் என பிரகடனப்படுத்தப்பட்டு கையகப்படுத்தப்பட்டு இராணுவத்தினரின் பாவனையில் இருந்து 8.800 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளது. ஆனால் விடுவிக்கப்பட்ட காணிகளில் 4.770 ஏக்கர் காணிகளுக்கு உரிமையாளர்கள் இல்லாத நிலையில் அவை தொடர்ந்தும் மக்கள் பயன்படுத்தாத நிலையில் அக்காணிகள் பற்றை காடுகளாக காணப்படுகின்றன.

காணிகளை விடுவிக்குமாறு போராட்டங்களை மேற்கொள்ளும் பொதுமக்கள் காணிகள் விடுவிக்கப்பட்ட பின்னர் மீளகுடியமர்வதற்கு ஆர்வம் காட்டவில்லை என கவலை தெரிவித்தார். (ஞா)

## மாணவன் சட...

கோப்பாய் தெற்கு பகுதியில் மாணவன் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.


இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் அதே இடத்தை சேர்ந்த 19 வயதுடைய யாழ் மத்திய கல்லூரியில் உயர்தரத்தில் கல்வி கற்கும் சிவகுமார் டினோஜன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவரின் மரண விசாரணையை யாழ் போதனா வைத்திய சாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஞா)












# தேவை

விற்பனைத் துறையில் ஆர்வம் உள்ளவர்கள் உடனடியாகத் தேவை.
திறமைக்கு ஏற்ப கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். (2010)

தொடர்புகளுக்கு:- 0772938757

## விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

UK - 550/= Kg

DELIVERY IN 3-5 DAYS

எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • கொடிகாமம் • திருகோணமலை • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • மானிப்பாய் • மருதங்கேணி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை (C-8785)

0768226240 V2 TRAVELS


# யாழில் 10 லட்சம் இறால் குஞ்சுகள் கடலில் விடுவிப்பு

(கரணவாய்)

பருவ கால மீன் வளர்ப்பை அபிவிருத்தி செய்யும் நோக்கில் கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் தொண்டைமானாறு, மண்டான் மற்றும் ஆவரங்கால் உப்பாறு பகுதி ஏரிகளில் 10 இலட்சத்து 60 ஆயிரம் இறால் குஞ்சுகள் விடப்பட்டன.

கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கருத்திட்டத்தின் அடிப்படையில் தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் குறித்த திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை தொண்டைமானாறு மற்றும் ஆவரங்கால் உப்பாறு ஏரிகளில் விடப்பட்ட இறால் குஞ்சுகள் இன்னும் மூன்று மாதத்தில் சராசரியாக ஒரு இறால் 40 கிராம் எடை வரையில் வளர்ந்து இப்பிரதேசத்தில் உள்ள சுமார் 400க்கும் மேற்பட்ட மக்களுக்கு ஏறத்தாழ 20 கோடி வருமானமாக ஈட்டிக்கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந் நிகழ்வில் யாழ்ப்பாணம் நீரியல் வளத்துறை பணிப்பாளர் எஸ். சுதாகரன் மற்றும் நீரியல் வளத்துறை அதிகாரிகள் ஈ.பி.டி.பியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஞா-60)

## யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்



### இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு 2020

காலம் : இன்று (03.02.2020) திங்கட்கிழமை
நேரம் : பி.ப 02.00 மணி
இடம் : பாடசாலை மைதானம்





தலைவர்
திரு. ந. பரமேஸ்வரன்
வித்தியாலய முதல்வர்

பிரதம விருந்தினர்
'இசைவாணர்' முத்துக்குமாரு கோபாலகிருஷ்ணன்
பழைய மாணவர் (கண்ணன் இசையமைப்பாளர்)

சிறப்பு விருந்தினர்
தேசபந்து தேசகீர்த்தி
லயன் அ. கிருபாகரன்
அதிபர் கிருபா லேணர்ஸ்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பாடசாலைச் சமூகம்


# வேலைவாய்ப்பு

பகல் மற்றும் இரவு நேரங்களில் ஹோட்டல் ஒன்றில் சுத்திகரிப்பு பிரிவில் வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை (C-9040)

077 780 3210

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## ராஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும். (2185)

தொடர்பு: ராஜ் - 077 679 6623

## CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World Wide Express
இல. 401 மானிப்பாய் வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம். (C-9129)
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062, 077 8655413

## SHAMROCK ACADEMY
எச்சமோட்டை

2020 O/L மாணவர்களுக்கான
விஷேட கணித வகுப்புக்கள்

யாழ். முன்னணி ஆசிரியர்குழாம்
Mr.B.Jeyaruban (I.S.A)
Mr.S.Jeevan
Mr.K.Prasanna

ஒரு வகுப்புக்கான கட்டணம் 50 ரூபா மட்டும்

புதன், வியாழன் 06-07 P.M (2005)

குறிப்பு:- கல்வியில் ஆர்வம் உடையவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவார்கள்.

T.P :- 0762491717

## சாவகச்சேரியில்...
வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=

- சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.

076 443 1576

அருள்

இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (C-9122)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 24 - 03 - 1959
உதிர்வு 04 - 01 - 2020

திருமதி S. புஸ்பராணி (லங்கா)

திதி: வளர்பிறை நவமி

எம் குலவிளக்காய் ஒரு கூட்டுக்கிளியாய் எம்முடன் வாழ்ந்திருந்த
பஞ்சவர்ணக்கிளியே எம்மைத் தவிக்கவிட்டு பாதியிலே சென்றதென்ன?
எம்முடைய கண்ணீர்க்காணிக்கை உந்தனுக்கே.

எம் குடும்ப ஒளிவிளக்கு (லங்கா) புஸ்பராணி அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு உடன் வந்து ஆறுதல் கூறிய உறவுகளுக்கும், தொலைபேசி, துண்டு பிரசுரங்கள், அஞ்சலி பதாதைகள் மூலமும் எமது துயரில் பங்குகொண்டோர்க்கும் பல்வேறு உதவிகளை புரிந்த அன்புள்ளங்களுக்கும் இறுதி ஊர்வலத்தில் பங்குபற்றியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி உரை நிகழ்த்தியவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவிகள் புரிந்த நல்லுள்ளங்களுக்கும் எமது இதய பூர்வ நன்றிகள்.

இன்று (03.02.2020) அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அழைப்பிதழ்கள் கிடைக்கா அன்பர்கள் இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்.

நீகன் வைத்திய நிலையம்,
கலைமகள் வீதி,
இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.

(C-9138)

மகன் S.T. குமரன் 0771689966
குண்டுமணி குடும்பத்தினர்
0789135060, 0041798980881
0757387993, 0041793603667


# வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

## அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

021 222 3536 (C-9128)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.02.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.